பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

குறைந்த செலவில் குடும்பமாக
கனடாவில் குடியேற...
WINSTAR VISA CONSULTANTS
இல.106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
(சி/400)
web: www.winstarjaffna.com
fb.winstar visa consultants
தொலைபேசி: 021 300 4641

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 11, புதன்கிழமை 27.09.2017 கதிர் 325





நல்லூரில் நேற்று நடைபெற்ற தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படம். பார்வையையும், இரு கைகளையும் மணிக் கட்டுடனும் இழந்த போராளி ஒருவர் அஞ்சலி செலுத்துகிறார். நிகழ்வில் திரண்டிருந்த பொது மக்கள் மற்றும் பிரமுகர்கள் அடுத்த படங்களில்.

# தமிழர் தாயகம் எங்கும் திலீபன் நினைவேந்தல்

## உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 27

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பொறுப்பாளராகவிருந்த தியாக தீபம் திலீபனின் முப்பதாவது வருட நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகம் எங்கும் உணர்வு பூர்வ மாக முன்னெடுக்கப்பட்டன. தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் தேசங் களிலும் நேற்று இந்த நிகழ்வுகள் பெருத்த எடுப்பில் இடம்பெற்றன என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன. பக்கம் 18

# தியாகி திலீபன் சாவை அரவணைத்த நல்லூரில் பிரதான அஞ்சலி நிகழ்வு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,செப்.27

இந்திய – இலங்கை அரசுகளிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து, ஒரு சொட்டு நீர் கூட உள்ளெடுக்காமல் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து உயிர்நீத்த தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 30 ஆவது ஆண்டு நினைவேந்த நிகழ்வு நேற்று நல்லூரில் இடம்பெற்றது.

நல்லூர் கந்தன் ஆலய வீதியில் 12 நாள்கள் உண்ணா நோன்பிருந்த தியாகதீபம் திலீபன், 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் 26ஆம் திகதி காலை 10.48 மணியளவில் வீரச்சாவைத் தழுவினார்.

திலீபன் வீரச்சாவடைந்த நல்லூர் ஆலய வடக்கு வீதியில், காலை 10.48 மணியளவில் அஞ்சலி செலுத்தப்பட்டது. பக்கம் 18

# இரத்மலானையில் மியன்மார் முஸ்லிம் அகதிகளின் வீட்டின் முன் பிக்குகள் தலைமையில் அடாவடித்தனம்

கொழும்பு,செப்.27

மியன்மார் நாட்டின் ரோஹிங்யா முஸ்லிம் அகதிகள் 32 பேர் தங்க வைக்கப்பட்டிருந்த – இரத்மலானை பகுதியில் அமைந்துள்ள – வீடு (Safe House) தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

படகின் மூலம் ஆஸ்திரேலிய நோக்கிப் பயணித்த பக்கம் 18



# ஹக்கீம் – ரிஷாத் – ஆஸாத் சாலி நேற்று ஜனாதிபதியுடன் சந்திப்பு

## முஸ்லிம்களின் பல முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வாம்

அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் மற்றும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் ஆஸாத் சாலி ஆகியோர் நேற்று மாலை கொழும்பில் ஜனாதிபதியை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துப் பேசினர்.

இந்தப் பேச்சில் முஸ்லிம் மக்கள் எதிர்கொண்ட பக்கம் 18

# ஐ.நா. மனித உரிமைகள் ஆணையருக்கு எதிராக ஐ.நா. செயலரிடம் முறைப்பாடு

## இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் அத்துமீறுகிறாராம்

நியூயோர்க், செப்.27

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் அத்துமீறி நடந்து கொள்கிறார் என ஐ.நா. பொதுச்செயலாளரிடம் நேரில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புலம்பெயர் பூகோள இலங்கையர் அமைப்பின் மூலமாக இந்த முறைப்பாடு ஐ.நா.பொதுச் செயலாளருக்கு ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இந்த அமைப்பின் சார்பில் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, அமைப்பின் செயலாளர் வசந்த கீர்த்திரத்ன உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வின் போது கலந்து பக்கம் 18

# அனுமதிப் பத்திரமின்றி பயணிகள் சேவையில் ஈடுபட்ட பஸ்ஸுக்கு 2 லட்சம் ரூபா அபராதம்!

கொழும்பு,செப்.27

வீதி அனுமதிப் பத்திரமின்றிப் பயணிகள் சேவையை நடத்திய பஸ் ஒன்றின் உரிமையாளருக்கு இரண்டு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை – கண்டி பிரதான வீதியில் பக்கம் 18

# ரோஹிங்யாக்கள் பூஸா முகாமுக்கு

கொழும்பு,செப்.27

பௌத்த வன்முறையால் பாதிக்கப்பட்டு அகதிகளான நிலையில் இலங்கையில் தங்க வைக்கப் பக்கம் 18

# வித்தியா கொலை: இன்று தீர்ப்பு!

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கை விசாரணைக்கு உட்படுத்திய 'ட்ரயல் அட் பார்' நீதிபதிகள் குழு இன்று தமது தீர்ப்பை அறிவிக்கவுள்ளது.

இன்று வழங்கப்படவுள்ள தீர்ப்பு பெரும் எதிர்பார்ப்பைத் தோற்றுவித்துள்ளது.

வித்தியா படுகொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களில் முதலாம் மற்றும் 9ஆம் எதிரிகள் தவிர்ந்த ஏனை பக்கம் 18

# சுங்கப் பணிப்பாளர் நாயகமாக மட்டு. அரச அதிபர் சாள்ஸ் நியமனம்



கொழும்பு, செப்.27

மட்டக்களப்பு அரசாங்க அதிபராகப் பணியாற்றி வந்த பி.எஸ். எம்.சாள்ஸ் உடனடியாக நடைமுறைக்கு வரக்கூடியதாக சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் பரிந் பக்கம் 18

# நாடாளுமன்றத்தில் எம்.பிக்களின் அறைகள், அலுமாரிகள் சோதனை

கொழும்பு,செப்.27

நாடாளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டு 70 வருட பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் 3 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விசேட அமர்வு இடம்பெறவுள்ளதன் காரணமாக எதிர்வரும் 2 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர்களின் அறைகளையும் அவர்களது அலுமாரி, பெட்டகங்களையும் பரிசோதனைக்கு உட்படுத்த பக்கம் 18

# வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் நிறைவு!

வவுனியா, செப். 27

வவுனியாவில் கடந்த 215 நாள்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது கோரிக்கைகளுக்கு இதுவரை ஆக்கபூர்வமான பதிலேதும் அரசினாலும் தமிழ் தலைமைகளாலும் வழங்கப்படாத நிலையில் சர்வதேசம் தமக்கான நீதியை பெற்றுத் தரவேண்டும் எனக்கோரி இரு நாள்கள் உணவுதவிர்ப்பு போராட்டத்தை நேற்று முன்தினம் முதல் முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா கந்தசாமி கோவிலில் தேங்காய் உடைத்து வழிபாடுகளில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அங்கிருந்து தாம் போராட்டத்தினைமுன்னெடுத்துவரும் ஏ9 வீதியின் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்த நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மாரின் உடல் நிலை சோர்வடைந்திருந்தது.









இந்தநிலையில், நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் மனித உரிமைச் செயற்பாட்டாளர் அருட் சகோதரி நிக்கோலாவால் நீராகாரம் வழங்கி முடித்து வைக்கப்பட்டது. எனினும் தமக்கான தீர்வு வழங்கப்படாவிட்டால் விரைவில் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (100)

# வவுனியாவில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய பொலிஸாருக்கு வெகுமதி வழங்கும் நிகழ்வு!









அர்ப்பணிப்புடன் பணியாற்றிய வவுனியா மாவட்ட பொலிஸாருக்கு வெகுமதி வழங்கும் நிகழ்வு நேற்று மில் வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரி.எம். எஸ்.தென்னக்கோன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கலந்துகொண்டார்.

வவுனியா மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் போதைப்பொருள் பாவனை மற்றும் குற்றச் செயல்களை தடுப்பதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய 21 பொலிஸாருக்கு வெகுமதிகள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்ட போக்குவரத்து பொலிஸ் அதிகாரி எஸ்.ஐ. அசோக்க ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 700 ரூபாவை அதிகபட்ச வெகுமதியாக பெற்றுக்கொண்டிருந்தார்.

வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கிய பொதுமகன் ஒருவருக்கும் 5 ஆயிரத்து 500 ரூபாய் வெகுமதி அறிவிக்கப்பட்டிருந்தது.

பொலிஸாருக்கு பரிசில் வழங்கும் நிகழ்வில் கலை நிகழ்வுகள்இடம்பெற்றிருந்தன கலை நிகழ்வுகளில் ஈடுபட்டிருந்த மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

வவுனியாமாவட்டபொலிஸ் நிலையங்களின் பொலிஸாருக்குவவுனியாமாவட்டஉதவி பொலிஸ் அத்தியட்சகர் ரி.எம். எஸ்.தென்னக்கோன் மற்றும் வன்னிமாவட்டபிரதிபொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோர் பரிசில்களை வழங்கினர். (100)

# தொடரும் கேப்பாபிலவு போராட்டம் தீர்வுக்குக் காத்திருக்கும் மக்கள்!





முல்லைத்தீவு, செப். 27

கேப்பாபிலவு மக்களின் தொடர்நிலமீட்புப் போராட்டம் ஏழு மாதங்களாக தீர்வின்றி தொடர்கின்றது.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி தொடர் நில மீட்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டபோதும் எந்தவொரு தீர்வும் இதுவரை முன் வைக்கப்படவில்லை.

138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி தொடர் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டு சொந்த நிலத்தில் மீள்குடியேற்றபோவதாகத் தெரிவித்து, மெனிக்பாம் நிலன்புரி நிலையத்திலிருந்து அழைத்து வரப்பட்ட மக்கள் மாதிரிக் கிராமங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

எனினும் மாதிரிக் கிராமங்களில் எந்தவோர் அடிப்படை வசதியுமின்றி வாழ்ந்து வரும் மக்கள் சொந்த நிலத்தில் மீள் குடியேற்றுமாறு கோரிக்கை விடுத்து வந்தனர்.

மக்களின் கோரிக்கை தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டு வந்த நிலையில் கேப்பாபிலவு பூர்வீக மக்கள் இராணுவதலைமையகத்திற்குமுன்பாககூடாரம்அமைத்து தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

# திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் மற்றொரு வதைமுகாமும் இருந்துள்ளது

## நீதிமன்றில் குற்றப் புலனாய்வுப் பிரிவு தகவல்

திருகோணமலை கடற்படைத்தளத்தில் இருந்த இரகசிய நிலத்தடி வதைமுகாமிலிருந்து நூறு மீற்றர் தூரத்தில் மற்றொரு இரகசிய சித்திரவதைக் கூடம் இருந்ததையும், அங்கு கடந்த காலங்களில் பலர் தடுத்து வைக்கப்பட்டிருந்தமையையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர். இதனை அவர்கள் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் வெளிப்படுத்தினர்.

கொழும்பில் கடந்த 2008ஆம் ஆண்டு மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான வழக்கிலேயே, புதிய இரகசிய முகாமைக் கண்டறிந்ததாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் சமூகக் கொள்ளை தொடர்பான விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிசாந்த சில்வா கோட்டை நீதிவானிடம் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

2008ஆம் ஆண்டு கொழும்பில் கடத்தப்பட்ட 11பேரும் திருகோணமலை கடற்படைத் தளத்தில் உள்ள இரகசிய வதைமுகாமான 'கன்சைட்' தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தமையை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்திருந்தனர். இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சார்பில் மன்றில் முன்னிலையான விசாரணைப் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிசாந்த சில்வா மன்றில் தெரிவித்தவை வருமாறு:-

இதுவரை நாம் 25 கடற்படை உத்தியோகத்தர்களிடம் விசாரணை செய்துள்ளோம். கடற்படை முகாம்களுக்கு சென்று வாக்குமூலங்களை நாம் பெற்றோம். தற்போது விளக்கமறியலில் இருந்து வரும் - கன்சைட் முகாமுக்குப் பொறுப்பாகச் செயற்பட்ட - கொமாண்டர் ரணசிங்கவின் கீழ் சேவையாற்றிய இருவரின் வாக்கு மூலமும் அதில் அடங்குகிறது.

அவர்களது வாக்குமூலத்தின்படி கன்சைட் நிலத்தடி சிறைக் கூடத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் மற்றொரு இரகசிய தடுப்பு மையம் அல்லது சிறைக் கூடம் இயங்கியுள்ளது. இங்கும் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்குக்கு உரிய 11 பேரும் கன்சைட் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அவர்கள் அல்லாமல் வேறு ஒரு தரப்பினரே அந்தச் சிறைக் கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் யார் என்பது இதுவரை தெரியவில்லை. விசாரணைகள் தொடர்கின்றன. இந்தக் கடத்தல் மற்றும் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பில் மேலும் பலர் கைது செய்யப்படவேண்டியோர் பட்டியலில் உள்ளனர்.

இந்த விசாரணைகளுக்கு கடற்படையினர் வழங்கும் ஒத்துழைப்பு மிகக் குறைவாகவே உள்ளது. நாம் கொமாண்டர் ரணசிங்கவின் கீழ் சேவையாற்றியோர் பட்டியலை கோரியிருந்தோம். அவர்கள் 15 பேர் கொண்ட பட்டியல் ஒன்றை அனுப்பினர். அவர்களிடம் விசாரணை செய்த போது, நாம் கோரிய காலப் பகுதியில் அவர்களில் பெரும்பாலானோர் ரணசிங்கவின் கீழ் சேவையாற்றவில்லை என்பது தெரியவந்தது. கடற்படை விசாரணைக்கு ஒத்துழைக்காமல் பொய்யான தகவல்களை வழங்குவதால் விசாரணையை முன்னெடுப்பதில் சிக்கல்கள் நிலவுகின்றன. இது தொடர்பில் நாம் புதிய கடற்படைத் தளபதியின் கவனத்துக்கு விடயத்தைக் கொண்டு வந்துள்ளோம்.

இது மட்டுமன்றி ஹெட்டியாராச்சி பயன்படுத்திய வான் கொமாண்டர் முனசிங்கவின் மனைவிக்குச் சொந்தமானது. இந்த வான் ஹெட்டியாராச்சிக்கு வழங்கப்பட்ட விதம் தொடர்பில் நாம் ஆவணங்களை கடற்படையிடம் கோரினோம். இதுவரை எந்தத் தகவல்களையும் வழங்க கடற்படை முன்வரவில்லை. இந்த விடயத்தையும் புதிய கடற்படைத் தளபதிக்கு அறிவித்துள்ளோம் - என்றார். (உ)

## பரிசளிப்பு விழா

கோப்பாய், செப்.27

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் ச.வேலழகன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா, கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக பழைய மாணவனும், மாவட்ட கடற்றொழில் பரிசோதகருமான ந.மகேஸ்வரனும் கலந்து கொள்வர். (இ)

## நகர அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல்

'யாழ். குடாநாட்டின் நகர அபிவிருத்தித் திட்டம்' பற்றிய கலந்துரையாடல் ஒன்றை யாழ். முகாமையாளர் சம்மேளனம், இலங்கை பொறியியலாளர் நிறுவகம் - வடபிராந்தியம் ஆகியன இணைந்து ஒழுங்கு செய்துள்ளன.

நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் வடமாகாண நகர அபிவிருத்திச் சபைப் பணிப்பாளர் வை.ஏ.ஜி.கே. குணதிலக கலந்து கொள்ளவுள்ளார்.

# சிறுவனின் கையை முறித்த சிறிய தந்தையார் கைது!

## வேடிக்கை பார்த்த தாயும் பொலிஸில்



யாழ்ப்பாணம், செப்.27

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீடொன்றில் 7 வயது சிறுவனின் கையை அடித்து முறித்தவர் என்று கூறப்படும் சிறிய தந்தையையும் அதை வேடிக்கை பார்த்த பெற்ற தாயையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் துன்புறுத்தலுக்குள்ளான சிறுவன் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு சிகிச்சை பெற்று வருகின்றான். தவறு ஒன்று செய்ததால் தான் எனக் கூறி சிறுவனைத் தாயின் இரண்டாவது கணவன் எனக் கூறப்படும் நபர் கடுமையாகத் தாக்கியுள்ளார். சிறுவனின் தாயாரும் அதனைத் தடுக்காது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார் என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சிறுவனின் தாயாரும் சிறிய தந்தையும் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (உ)

## 'சாகசம்' புரிந்த மோட்டார் சைக்கிள்

யாழ்ப்பாணம், செப்.27

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் நாயைச் சாகடித்து, அங்கு நின்ற ஓட்டோவுடன் மோதியது மட்டுமன்றி, சைக்கிளில் சென்ற வயோதிபரையும் விட்டு வைக்கவில்லை. வயோதிபர் பலத்த காயங்களுக்கு இலக்கானார்.

இந்தச் சம்பவம் நேற்று யாழ். முஸ்லிம் கல்லூரி வீதியில் ஒஸ்மானியக் கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமுற்ற வயோதிபர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து நடந்த இடத்துக்கு வந்த போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி மோட்டார் சைக்கிள், ஓட்டோ மற்றும் சைக்கிளை பொலிஸ் நிலையத்துக்கு எடுத் துச் சென்றனர்.

வாகனங்களின் அதிவேகம் காரணமாக இவ்வீதியில் இவ்வாறான விபத்துக்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். (இ-19)

# வவுனியா பாடசாலையில் மாணவர்கள் கைகலப்பு!

## ஒருவர் காயம்; மூவர் பொலிஸாரால் கைது

வவுனியா, செப்.27

வவுனியாவில் பிரபல்யமான பாடசாலை ஒன்றில் முக புத்தக பதிவேற்றத்தால் மாணவரிடையே ஏற்பட்ட தகராறு பாடநேர இடைவேளையின் போது கைகலப்பாக மாறியதில் ஒரு மாணவன் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான். இச்சம்பவம் தொடர்பில் மூன்று மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மதியம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருபவை வருமாறு:-

வவுனியா நகரில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கடந்த ஒருவருடத்திற்கு மேலாக மாணவர்களிடையே சிறு சிறு கைகலப்புக்கள் இடம்பெற்று வந்த நிலையில், நேற்று அது பெரும் கைகலப்பாக மாறியது. பாடசாலையில் பாடநேர இடைவேளையின்போது காலை 10.50 மணியளவில் மாணவர் ஒருவர் மீது ஏனைய மாணவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் தரம் 12இல் கல்வி கற்கும் சிவராசா சிவபெருசன் என்ற மாணவன் காயமடைந்து வவுனியா பொதுவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றான். இவர் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் எனத் தெரிவித்து, மூன்று மாணவர்களைப் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பந்தப்பட்ட பாடசாலையில் நிர்வாகத்தினர் திறனாகச் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டைப் பெற்றோர்கள் முன்வைத்துள்ளனர். இவர்களின் திறனற்ற செயற்பாடே இப்போது மாணவர்கள் தமது கல்வி கற்கும் பாடசாலைக்கு உள்ளேயே கைகலப்பில் ஈடுபடவழிவகுத்துள்ளது எனவும், இந்த விவகாரத்தை ஆரம்பத்திலேயே தீர்த்து வைக்க பாடசாலை நிர்வாகம் தவறியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கைது செய்யப்பட்ட மூன்று மாணவர்களையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தத் தாங்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டிய நிலையில் இந்தப் பாடசாலை ஆசிரியர் ஒருவரும் மாணவர்களுடன் அநாகரிகமாக நடந்து கொள்கின்றார் எனவும் அவரும் அடிதடியில் ஈடுபடுகின்றார் எனவும் மாணவர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

# குற்றவாளிகளை நாடு கடத்தும் உடன்பாடுகளில் இலங்கை ஒப்பம்

பல்வேறு நாடுகளுடன் குற்றவாளிகளை நாடு கடத்தும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. பாதுகாப்புத் துறை ராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன இந்த தகவலை நேற்று வெளியிட்டுள்ளார்.

இந்த உடன்படிக்கைகளின் கீழ் இரண்டு தரப்புக்களிலும் உள்ள குற்றவாளிகளை பரஸ்பரம் நாடு கடத்தமுடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறுதியாக குற்றவாளிகளை நாடு கடத்தும் உடன்படிக்கை உக்ரைன் நாட்டுடன் செய்து கொள்ளப்பட்டது.

விரைவில் ஆசிய மற்றும் ஐரோப்பியாவின் பல நாடுகளுடன் இத்தகைய உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்படவுள்ளன.

ரஷ்யா, உக்ரைன், சீனா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுடன் செய்துகொள்ளப்பட்ட குற்றவாளிகளை நாடுகடத்தும் உடன்படிக்கைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த வேளையிலேயே ராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன இந்த தகவல்களை வெளியிட்டார்.

# இடைக்கால அறிக்கை குறித்து பங்காளிக் கட்சிகளுடன் பேச்சு

## தமிழரசுத் தலைவர் மாவை கருத்து

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான நாடாளுமன்ற வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாக பங்காளிக் கட்சிகள் மற்றும் தமிழ் புலமையாளர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆலோசனை நடத்தவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை அம்பாறையில் இடம்பெற்றது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட, மாவை சேனாதிராசா, அம்பாறையில் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் இடைக்கால அறிக்கை தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரிவித்தார்.

அத்துடன் இடைக்கால அறிக்கை தொடர்பான கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் கருத்துக்களையும், தமிழ் புலமையாளர்களின் கருத்துக்களையும் அறிய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினர்.

காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தாமதமாகும் நீதி மறுக்கப்பட்ட நீதியே!

இலங்கையின் நீதித்துறை தொடர்பான ஆய்வு ஒன்று அது எவ்வளவு தூரம் மோசமான நிலையில் இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில் வெளிப்பட்டிருக்கின்றது.

ஒரு குற்றம் இழைக்கப்பட்டால், அது தொடர்பான பிணக்கு முடிவுக்கு வருவதற்கு சராசரியாக 17 வருடங்கள் எடுக்கின்றன என்ற அதிர்ச்சித் தகவலை அந்தப் புள்ளிவிவரம் அம்பலப்படுத்தி இருக்கின்றது. குற்றவியல் வழக்குகளைத் துரிதப்படுத்துவது தொடர்பான ஓர் ஆய்வுஅறிக்கையை பிரதி அமைச்சர் அஜித் பெரேரா நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றார். அந்த ஆய்வு அறிக்கையே இந்த உண்மையைப் போட்டுடைத்திருக்கின்றது.

ஒரு குற்றம் இழைக்கப்பட்ட காலத்தில் இருந்த அதன் மீதான நடவடிக்கைகளைக் கட்டம் கட்டமாக வகுத்து, அந்த ஒவ்வொரு கட்டத்துக்கும் எடுக்கின்ற கால அளவை சராசரியாக வெளியிட்டிருக்கின்றது அந்தப் புள்ளிவிவரம்.

இலங்கையின் நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளைத் தொகுத்துப் பிரித்து, ஆராய்ந்து இந்த அறிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இதன்படி -

ஒரு குற்றம் இழைக்கப்பட்டு மேல்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படுவதற்கு சராசரியாக நான்கு வருடங்களும் ஏழு மாதங்களும் பிடிக்கின்றனவாம்.

அது ஒரு கொலைக் குற்றமாயின், அது தொடர்பான மரண விசாரணையில் தொடங்கி, நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறும் சுருக்க முறையற்ற விசாரணைகள் எல்லாம் முடிவுற்று, விவகாரம் மேல்நீதிமன்றத்திடம் பாரதீனப்படுத்தப்பட்டு, அங்கு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படுவதற்கு இடையில் நான்கு வருடங்கள் ஏழு மாதங்கள் கடந்துவிடும்.

குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், மேல்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை ஆரம்பமாவதற்கு இன்னும் சராசரியாக மூன்று வருடங்களும் ஏழு மாதங்களும் செல்லும்.

இது வெறுமனே மனக் கணக்கில் எடுக்கப்பட்ட கணிப்பு அல்ல.

இலங்கையில் விசாரிக்கப்பட்ட வழக்குகளைப் பரிசோதித்து, அவற்றின் புள்ளிவிவரத் தகவல்களை உள்வாங்கிப் பெறப்பட்ட ஆய்வு அறிக்கைப் பெறுபேறு இது.

அதாவது, ஒரு குற்றம் இழைக்கப்பட்டு சராசரியாக எட்டு வருடங்களும் இரண்டு மாதங்களும் கடந்த பின்னர்தான் அது பற்றிய விசாரணையே மேல்நீதிமன்றத்தில் தொடங்கும். எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவம் குறித்து, அத்துணை நீண்ட காலத்துக்குப் பின்னர் அளிக்கப்படும் சாட்சிகளை வைத்துத்தான் நீதிமன்றம் முடிவைத் தீர்மானித்துத் தீர்ப்பை அறிவிக்கிறது.

அப்படியாயின், அத்தகைய தீர்ப்புகளில் - அல்லது முடிவுகளில் - எத்துணை துல்லியமும், நீதியும் இருக்கும் என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

மேல்நீதிமன்றங்களில் வழக்கு விசாரணை தொடங்கினாலும் ஓரிரண்டு மாதங்களில் அதை முடித்துத் தீர்ப்பளித்து விடுவார்கள் என்று இல்லை.

விசாரணை தொடங்கித் தீர்ப்பளிக்கப்படுவதற்கும் கூட சராசரி ஒரு வருடமும் எட்டு மாதங்களும் பிடிக்கின்றனவாம்.

அதாவது, ஒரு குற்றம் இழைக்கப்பட்டு மேல்நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்படுவதற்கு சராசரியாக பத்து வருடங்கள் - தசாப்த காலம் - சென்று விடுகின்றது.

இதற்குப் பிறகு, இந்த வழக்குக்கு மேல்முறையீட்டு நீதிமன்றத்திலும் அதைத் தொடர்ந்து உயர்நீதிமன்றத்திலும் மேன்முறையீடுகள் செய்யப்படுமாயின் மேலும் ஏழு ஆண்டுகள் கடந்துவிடும்.

ஆக, ஒரு குற்றம் இழைக்கப்பட்டு அது பற்றிய சட்டப்பிரச்சினை முற்றாகப் பூர்த்தி அடைவதற்கு சராசரியாக 17 ஆண்டுகள் கடந்துவிடும் என்பதுதான் இலங்கையின் நீதித்துறை நிலைமை.

'தாமதமாகும் நீதி, மறுக்கப்பட்ட நீதியாகி விடும்' என்பது நீதித்துறையின் முதுமொழி.

இலங்கையின் நீதித்துறை விடயத்தில் நீதி மறுக்கப்படுவது மட்டுமல்ல, இந்த நீண்ட இழுபறிகளால், பல பொதுமக்களின் - அப்பாவிகளின் - முக்கிய வாழ்க்கைக் காலம் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் அவமாகி, அவர்கள் வெறும் ஜடமாக வெளிவரும் அவலமும் நடப்பதுண்டு.

சாதாரண குற்றவியல் வழக்குகளில்தான் இந்த நிலைமை. சிவில் வழக்குகளில் இந்தக் கால இழுபறி இன்னும் மோசம்.

இது எல்லாவற்றிலும் மோசம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வாடும் தமிழ்க் கைதிகளின் நிலைமை.

காலவரையறை இல்லாமல் தடுத்து வைத்திருத்தல், நீதிமன்றத்தில் குற்றஞ்சுமத்தப்பட்ட பின்னர் விசாரணையின்றித் தடுப்புக் காவலில் வைத்திருத்தல் என்று அந்தச் சட்டத்தின் கீழான கால இழுபறி குறித்து ஓர் ஆய்வு நடத்தப்படுமானால் அது மேலும் அதிர்ச்சி தரும் புள்ளிவிவரங்களைப் பெறுபேறாகத் தரும் என்பது நிச்சயம்.

இலங்கையின் நீதித்துறையும், அதன் கட்டமைப்பும், அதைக் கையாள்பவர்களின் போக்கும், அதனோடு சம்பந்தப்பட்டு உழைக்கும் அதிகார வர்க்கத்தின் சிந்தனையும் மாறாத வரையில் இந்தக் கட்டுமட்டில்லாக் கால இழுபறி விவகாரம் தொடர் கதையாகவே நீடிக்கும்.

இலங்கையின் நீதித்துறையைத் தனது அரசியல் தேவைகளுக்கு வளைத்துப் போட எத்தனிக்கும் ஆட்சியாளர்களைக் கொண்டிருக்கும் நமது தேசத்தில், உண்மையான நீதியை, அதற்குரிய முறையில் நிலைநிறுத்தும் ஒரு நீதித்துறையை உருவாக்குகின்ற ஆட்சி மலரும் என்பது துர்லபமே.

# வசதியான மலசலகூடம் இருந்தும் மாணவர் பயன்படுத்த முடியாத நிலை!

## பாடசாலை சமூகம் கவலை!



கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் வசதியான மலசலகூடங்கள் அமைக்கப்பட்டும் அதனைப் பயன்படுத்த முடியாத நிலையில் மாணவர்கள் உள்ளனர் எனக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பெற்றோரும், கல்விச் சமூகமும் தெரிவித்தவை வருமாறு:-

பதினைந்து லட்சம் ரூபா பெறுமதியில் வசதியான மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் நகரின் மத்தியில் அமைந்துள்ள மத்திய ஆரம்ப வித்தியாலய காணியின் ஒரு பகுதியில் ஐந்து குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இவர்களுக்கு கிளிநொச்சி நகருக்கு உட்பட்ட இரணைமடுச்சந்திக்குஅருகில் இரண்டு பரப்பு வீதம் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

சொந்தமாக வழங்கப்பட்டுள்ள மாற்றுக் காணிக்கு நான்கு குடும்பங்கள் செல்லத் தயாராக உள்ளன.

அத்துடன், அங்கு வீடுகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வரும் நிலையில் ஒருவர் மாத்திரமே பாடசாலைக் காணியை விட்டுச்செல்வதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றார்.

இதனால், இந்தப் பகுதியில் பாடசாலைக்கு அமைக்கப்பட்டுள்ள மலசலகூடத்தை அங்கு கல்வி கற்கும் 416 சிறுவர்களும், 364 சிறுமிகளும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் இந்தப் பாடசாலை கல்விச் சமூகம் பலரின் கவனத்திற்கு கொண்டு சென்றும் இதுவரை எவ்வித பயனும் ஏற்படவில்லை என கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 780 மாணவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு இந்தப் பாடசாலை காணியிலிருந்து மாற்றுக் காணிக்குச் செல்ல மறுப்புத் தெரிவித்து வரும் ஒருவருக்கு எதிராக பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோர் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் பாடசாலைச் சமூகம் கோரியுள்ளது.

# வவுனியா சமூகசேவை திணைக்களத்தால் மாணவர்களுக்குத் தெளிவூட்டும் நிகழ்வு!



வவுனியா, செப். 27

முதியோரைப் பேணுவது மற்றும் அவர்களைச் சமூகத்தில் முக்கிய அங்கமாகக் கரிசனை கொள்வது தொடர்பாக மாணவர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வொன்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் வவுனியா, புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்டுள்ளது.

புதுக்குளம் மகாவித்தியாலய அதிபர் சுபாஸ்கரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீனிவாசன் கருத்துரைகளை வழங்கியிருந்தார்.

வவுனியா மாவட்ட சமூக சேவை திணைக்களத்தால் மாணவர்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்தச் செயற்றிட்டம் பாடசாலை ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (க)

# டிஜிற்றல் பொருளாதாரம் மிகவும் அவசியம்; 'வை-பை' ஆரம்ப நிகழ்வில் பிரதமர் ரணில்!



கொழும்பு, செப். 27

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு டிஜிற்றல் பொருளாதாரத்தை முன்னெடுப்பதன் அவசியத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் முதல்தடவையாக வை-பை பனல் கருவிகளை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலிமுகத்திடலில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமர் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதற்காக நாடு முழுவதிலும் வை-பை வலயங்களை ஸ்தாபிக்கப் போகின்றோம் எனப் பிரதமர் அங்கு மேலும் தெரிவித்தார்.

தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவும் உரையாற்றினார். பாடசாலைகளிலும் பிரத்தியேக வை-பை வலைப்பின்னல்களை உருவாக்கி மாணவர்களுக்குவசதிகளைஏற்படுத்திக் கொடுப்போம் என்றார் அவர். (க)

## நாளை

28.09.2017
வியாழக்கிழமை
நட்சத்திரம் : மூலம் பி.ப. 1.03 வரை
திதி : அட்டமி மு.இ. 8.35 வரை
சுபநேரம் : 7.32 – 9.02 வரை
இராகுகாலம் : 1.32 – 3.02 வரை

# நியூயோர்க்கில் எதிர்பார்த்த முக்கிய சந்திப்புகள் கைகூடாமலேயே நாடு திரும்பினார் ஜனாதிபதி மைத்திரி!

கொழும்பு, செப். 27

எதிர்பார்த்தபடி முக்கிய சந்திப்புகள் கைகூடாமலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பியுள்ளார்.

ஐ.நா. பொதுச்சபையின் 72 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்க நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனநேற்று முன்தினம் காலை கொழும்பு திரும்பினார்.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்கும் முக்கிய உலகத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு மைத்திரிபால சிறிசேன விருப்பம் கொண்டிருந்தார்.

எனினும்கொழும்பில்இருந்து புறப்படும் முன்னர், உறுதிப்படுத்தப்பட்ட, பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் பிரதமர்களுடனான சந்திப்புகள் மாத்திரம் இடம் பெற்றன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சீன அதிபர் ஷி ஜின்பிங், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜேர்மனி ஜனாதிபதி ஏஞ்சலா மார்க்கல், ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபே உள்ளிட்டவர்களைச் சந்திப்பதற்குஜனாதிபதிமைத்திரி விருப்பம் கொண்டிருந்தார்.

இந்தச் சந்திப்புகள் நடப்பதற்கு வாய்ப்புகள் இருப்பதாக, வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் கூறியிருந்தனர்.

எனினும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மார்க்கல், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் ஆகியோர் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.



இந்தியா சார்பில் வெளி விவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜூம், சீனா சார்பில், வெளிவிவகார அமைச்சர் வாங்யியும், ஜேர்மனி சார்பில், உதவி அதிபர் சிக்மர் கபிரியேலுமே கலந்து கொண்டனர். இதனால் இந்த நாடுகளின் தலைவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டாமல் போனது.

ஜப்பானியப்பிரதமர்ஷின்சோ அபே நியூயோர்க்கிற்கு வந்திருந்தபோதும், இலங்கைஜனாதிபதியைச் சந்திக்க அவர் நேரம் ஒதுக்கவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பைச் சந்தித்துப் பேச்சு நடத்தும் வாய்ப்பும் இலங்கை ஜனாதிபதிக்கு கிடைக்கவில்லை.

எனினும், உலகத் தலைவர்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி அளித்த வரவேற்பு உபசாரத்தின்போது, அமெரிக்க-இலங்கை ஜனாதிபதிகள்தமது துணைவியர்களுடன் இணைந்து ஒளிப்படம் எடுத்துக் கொண்டனர்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் தோமஸ் சானொன் மாத்திரம் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அதேவேளை, ஐ.நா. பொதுச் செயலர் அன்ரனியோ குட்ரெஸ் மற்றும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹூசேன் ஆகியோர் இலங்கை ஜனாதிபதியைச்சந்தித்துப்பேசியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நுவரெலிய இரவு போக்குவரத்து சேவை திருப்திகரமாக இல்லை!

கொழும்பு, செப். 27

நுவரெலியா மாவட்டத்தில் இரவு நேரங்களில் பயணிகள் போக்குவரத்து சேவைகளை முறையாக அமுல்படுத்துவதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்புகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய மாகாண சபை உறுப்பினர் சோ.ஸ்ரீதரன் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் போது தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நுவரெலியா மாவட்டத்தில் குறுந்தூர பயணிகள் பேருந்து சேவைகள் இரவு 7 மணியோடு மட்டுப்படுத்தப்படுவதால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நுவரெலியா - ஹட்டன், டயகம - தலவாக்கலை போன்ற பாதையூடான இரவு நேர போக்குவரத்து சேவைகள் முற்றாக இடம்பெறுவதில்லை, இந் நிலைமையை தவிர்ப்பதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் மத்திய மாகாண தனியார் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹட்டன் - நுவரெலியாவிற்கிடையிலான இன்டர்சிட்டி சேவைகள் முறையாக இடம் பெறாத காரணத்தினால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எதிர்காலத்தில் நடைபெறும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திற்கு மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அதிகாரிகளையும் இணைத்துக் கொள்வதன் மூலம் தனியார்



பயணிகள் போக்குவரத்து சேவைகள் குறித்த பல விடயங்களை ஆராய முடியும்.

இதேவேளை, மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உட்பட்ட மஸ்கெலியா காட்மோர் பாதையை துரிதமாக செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


# ஒக்ரோபர் 9 ஆம் திகதி கடற்படையின் கடல் பாதுகாப்பு கருத்தரங்கு ஆரம்பம்!

கொழும்பு, செப். 27

இலங்கைக் கடற்படை ஆண்டு தோறும் நடத்தும் சர்வதேச கடல்சார் கருத்தரங்கான 'காலி கலந்துரையாடல்-2017, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஒக்ரோபர் 9ஆம், 10ஆம் திகதிகளில் இந்த கடல்சார் பாதுகாப்பு மாநாடு, கொழும்பு, கோல்பேஸ் விடுதியில் இடம்பெறும் என்று சிறிலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா தெரிவித்தார்.

எட்டாவது ஆண்டாக நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், கடல்சார் பாதுகாப்புத் தொடர்பாக விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெறும். இதில் 38





நாடுகள் பங்கேற்கவுள்ளன.

2010ஆம் ஆண்டு சுமார் 100 பேராக இருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் பங்கேற்பு, 2017ஆம் ஆண்டு 200 பேராக அதிகரித்துள்ளது என்று இலங்கைக் கடற்படைத் தளபதி தெரிவித்தார்.

இந்த மாநாட்டில், பல்வேறு நாடுகளின் கடற்படைத் தளபதிகள், உயர்மட்ட அதிகாரிகள், தூதுவர்கள், பாதுகாப்பு ஆலோசகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

# விமான எதிர்ப்பு துப்பாக்கி ரவைகள் காங்கேசன்துறை பொலிஸாரால் மீட்பு!


யாழ்ப்பாணம், செப். 27

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மயிலிட்டி பிரதேசத்தில் விமான எதிர்ப்புதுப்பாக்கி ரவைகள் ஒரு தொகையை காங்கேசன்துறை பொலிஸார் மீட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் பாழடைந்த கிணற்றை சுத்தம் செய்தவர்களினால் வழங்கப்பட்ட தகவலையடுத்து காங்கேசன்துறை பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் சிசிரகுமார, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அபேரத்ன, அமிர்தலிங்கம் உள்ளிட்ட பொலிஸ் குழுவினரால் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கையில் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையில் 67 பெட்டிகளில் தலா 85 ரவைகள் வீதம் 5695 ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணையை காங்கேசன்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கு மாகாணசபை அதிகாரம் ஆளுநரிடம் கையளிப்பதில் அதிருப்தி!

மட்டக்களப்பு, செப். 27

கிழக்கு மாகாணசபையின் ஆட்சி அதிகாரம் ஆளுநரிடம் முழுமையாக கையளிக்கப்படுவது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தியடைந்துள்ளது என அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரும் கல்முனை மாநகர முன்னாள் முதலமைச்சருமான எம். நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த மாதத்துடன் ஆட்சிக் காலம் நிறைவடைந்து கலைகின்ற கிழக்கு மாகாண சபைக்கு, உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடாகும்.

எனினும், மாகாண சபைத் தேர்தல் திருத்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதனால், புதிய முறையில் தேர்தலை நடத்தும் பொருட்டு தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதனால், அப்பணிகள் பூர்த்தியடைந்த பின்னர், அடுத்த வருடம் மார்ச் மாதம் மாகாண சபைத்தேர்தல் நடத்தப்படும் என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், அவர் குறிப்பிட்டுள்ள காலப் பகுதியிலாவது கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அரசை எமது கட்சி வலியுறுத்துகிறது.

இந்தத் தேர்தலை மேலும் இழுத்தடிப்புச் செய்வதற்கு எந்த வகையிலும் இடமளிக்கக் கூடாது என எமது கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் பிரதமரிடம் நேரடியாக வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் கூறியிருக்கின்றமை போன்று மார்ச் மாதம் தேர்தலை நடத்துவதென்றால் மாகாண சபைத் தேர்தலுக்கான தொகுதிகளை வரையறுப்பதற்கான எல்லை நிர்ணயப் பணிகள் கால தாமதப்படுத் தப்படாமல் துரிதமாக நிறைவு செய்யப்பட வேண்டும். இது விடயத்தில் அரசு பொறுப்புணர்வுடன் நேர்மையாக செயற்பட முன்வர வேண்டும்.



அதேவேளை, கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு அடுத்த தேர்தல் நடைபெறும் வரையிலான காலப்பகுதியில் அந்த சபையின் ஆட்சி அதிகாரம் முழுமையாக ஆளுநரிடம் கையளிக்கப்படுவதில் எமது கட்சிக்கு உடன்பாடில்லை.

ஆகையினால், கிழக்கு மாகாண சபையின் நிர்வாகம் தொடர்பிலும் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் பிரதமரிடம் கலந்துரையாடி வருகின்றார் எனவும் நிஸாம் காரியப்பர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கிழக்குப் பல்கலை மாணவர்களுக்கு முக்கிய அறிவித்தல்!

மட்டக்களப்பு, செப். 27

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களினதும் முதலாம், இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 03ஆம் திகதி ஆரம்பமாகும் என கிழக்குப் பல்கலைக்கழக பதிவாளர் ஏ.எல்.ஜெளபர் ஸாதிக் தெரிவித்துள்ளார்.

விடுதி வசதிகளுக்கு தகுதியான அனைத்து மாணவர்களும் எதிர்வரும் 02ஆம் திகதி 6 மணிக்கு முன்னர் தத்தமது விடுதிகளுக்கு சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் தமக்கு விடுதி வசதி ஏற்படுத்தி தருமாறு கோரி கடந்த மாதம் 08ஆம் திகதி முதல் வந்தாறுமூலை வளாக நிர்வாக கட்டடத்தை முற்றுகையிட்டு, சாத்வீக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக பல்கலைக்கழக நிர்வாக நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

இதையடுத்து கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவை நிலைமை தொடர்பாக ஆராய்ந்து ஓகஸ்ட் 17ஆம் திகதி முதல் திருகோணமலை வளாகம் தவிர்ந்த வந்தாறுமூலை வளாகம் மற்றும் மட்டக்களப்பு சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானபீடம் ஆகியவற்றை மூடுவதற்குத் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஓட்டமாவடி - கோறளைப்பற்று மத்தி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்!

மட்டக்களப்பு, செப். 27

பிரதேச விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர் என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு அமைய பாலைக்காடு குளத்தில் மண் அகழப்படுவதை உடனடியாக நிறுத்துமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஓட்டமாவடி - கோறளைப்பற்று மத்தி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இதன்போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், பாலைக்காடு குளத்தில் மண் அகழப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த





நிலையில் மண் அகழ்வதற்கு வழங்கப் பட்ட இடத்தில் மண் அகழாமல் அதனை அண்டிய பகுதியில் மண் அகழ்வு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இதனால், இந்தப் பிரதேசம் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் முன்வைத்த கோரிக்கையையடுத்து மண் அகழ்வதை தடுத்து நிறுத்துமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன், கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைய ஓட்டமாவடி கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர்கள், கல்வி நடவடிக்கை நேரங்களில் ஸ்மார்ட் தொலைபேசி பாவனையை நிறுத்த வேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிரதியமைச்சர் அமீர் அலி கருத்து தெரிவிக்கையில்-

ஓட்டமாவடி பிரதேச சபையின் செயலாளரின் நடவடிக்கை சம்பந்தமாக அநேகமான முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப்பட்டுள்ளன.

கையூட்டல்கள் மூலம் கடைகள் வழங்கப்பட்டுள்ளதாக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் மக்களால் எங்களுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதுமாத்திரமில்லாமல் இங்கு முன்வைக்கப்பட்டுள்ள குற்றச் செயல்கள் தொடர்பில் பொருத்தமான விசாரணையை மேற்கொள்ள ஒரு விசாரணைக் குழுவை இப்போது நியமிக்கின்றோம் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஓட்டமாவடி பிரதேசசபையில் இடம்பெறும் ஊழல்கள் தொடர்பில் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நியமிக்கப்பட்ட குழுவினர் விசாரணை மேற்கொண்டு இரண்டு வாரங்களில் அறிக்கையினை இணைத் தலைமைகளுக்கு வழங்குமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வீடு தீக்கிரையாகி நிர்க்கதியான குடும்பம்!



வாழைச்சேனையில் கடந்த 15 ஆம் திகதி தீயினால் முற்றாக அழிவடைந்த நிலையில் அதன் உரிமையாளர் தங்குமிட வசதியின்றித் தாம் சிரமப்படுகிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்தவாரம் கல்குடா பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட வாழைச்சேனை, மருதநகரில் உள்ள கா.பாஸ்கரன் என்பவரது வீடு தீக்கிரையாகி முற்றாக அழிவடைந்து இருந்தது.

அது பற்றிய விசாரணைகளை கல்குடா பொலிஸார் மேற்கொண்டிருந்ததுடன், சம்பவம் நடந்து கிட்டத்தட்ட பதினொரு நாள்கள் கடந்துள்ளன.

இருப்பினும் தற்போது வரையிலும் உறவினரின் வீட்டிலேயே தங்குவதாகவும், உறவினரின் வீடு மிகச்சிறியதாக உள்ளமையால் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும் தீக்கிரையான வீட்டின் பெண் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அண்மையில் நடந்த விபத்தொன்றில் வீட்டின் உரிமையாளரான கா.பாஸ்கரன் என்பவரது கையொன்றில் ஏற்பட்ட காயத்தின் தாக்கத்தால் பலத்த வேலைகள் செய்ய முடியாமல் உள்ளதாகவும் இவ்வாறு நாளாந்த கூலி தொழில் செய்து வாழ்வதால் தற்காலிக கொட்டில் அமைப்பது கூட தங்களால் இயலாத காரியமாக இருப்பதை தெரிவித்துள்ளனர்.

அத்தோடு ஒன்றரை வயதுடைய குழந்தையை மற்றும் பாடசாலை செல்லும் பெண் பிள்ளையைவைத்துக்கொண்டு தற்காலிக தங்குமிட வசதிகூட இல்லாமல் உறவினர் வீட்டில் தங்கியிருப்பது கவலையளிப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

# இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு இலங்கை - பாக். ராணுவ அதிகாரிகள் இணக்கம்!

## பனாகொட முகாமில் விரிவான பேச்சு

கொழும்பு, செப். 27

இருதரப்பு ஒத்துழைப்பை தொடர்ந்து வலுப்படுத்துவதற்கு இலங்கை - பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளுக்குஇடையில்நடத்தப்பட்ட 4 ஆவது அதிகாரிகள் மட்டப் பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை - பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளுக்கு இடையிலான 4 ஆவது அதிகாரிகள் மட்டப் பேச்சுக்கள் கடந்த 23 ஆம் திகதி பனாகொடவில் உள்ள இலங்கை இராணுவ சமிக்ஞைப் படைப் பிரிவு தலைமையகத்தில் இடம் பெற்றது.



இதில்மேஜர்ஜெனரல்ஹபீஸ் உர்ஹ்மான்தலைமையிலான பாகிஸ்தான் இராணுவத்தின் 6 அதிகாரிகளும், இலங்கை இராணுவத்தின் சமிக்ஞைப் படைப்பிரிவின்தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அஜித் விஜேசிங்க, மேஜர் ஜெனரல் ரேனுகா ரோவெல், பிரிகேடியர் பிரபாத் தெமடன்பிட்டிய உள்ளிட்டஇலங்கை இராணுவ அதிகாரிகள் 15 பேர் கலந்து கொண்டனர்.

இந்தப் பேச்சுக்களின் போதே, இருதரப்பு இராணுவ ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது என்று இணக்கம் காணப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஹபீஸ் உர் ஹ்மான் பாகிஸ்தான் இராணுவத்தின் பிரதான தலைமையகத்தில் கட்டுப்பாட்டு, தொலைத்தொடர்பு, கணினிகள் மற்றும் புலனாய்வுப் பணியகத்தின் கட்டளைப் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மனித உரிமைகள் ஆணையாளருக்கு எதிராக ஐ.நா. செயலாளரிடம் முறைப்பாடு!

கொழும்பு, செப். 27

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையின் உள்ளக விவகாரங்களில் அத்துமீறி நடந்து கொள்கின்றார் என ஐ.நா. பொதுச்செயலாளரிடம் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புலம்பெயர் பூகோள இலங்கையர் அமைப்பின் மூலமாக இந்த முறைப்பாடு ஐ.நா. பொதுச் செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் சார்பில் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, அமைப்பின் செயலாளர் வசந்த கீர்த்திரன் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வின் போது கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் பூகோள இலங்கையர் சார்பில் கருத்து வெளியிட்டிருந்த பிரமுகர்கள், ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரிடம் குறித்த அறிக்கை கையளிக்கப்பட்டிருந்தது எனத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையத்தின் முன்மொழிவுகளை தாம் சவாலுக்கு உட்படுத்துவோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# இந்தியப்படை அதிகாரிகள் இலங்கைக்கு வருகை!



கொழும்பு, செப். 27

இந்திய இராணுவ உயர் கட்டளை கற்கைநெறி அதிகாரிகள்குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

எயர் கொமடோர் சுரேஸ் ஹொல்லன்னாவர் தலைமையிலான இந்தக் குழுவில் இந்தியாவின் முப்படை அதிகாரிகளும் இடம் பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவினர் நேற்று முன்தினம் இலங்கை இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

அத்துடன், இலங்கை விமானப்படை, கடற்படைத் தளபதிகளையும் இந்திய அதிகாரிகள் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இந்தியப் படை அதிகாரிகள் பத்தரமுல்லையில் உள்ள இந்திய அமைதிப்படையினருக்கான நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தினர்.

இருதரப்பு இராணுவ ஒத்துழைப்பு, மற்றும் பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக இந்திய படை அதிகாரிகள் குழு கொழும்பு வந்துள்ளது.

# 100 வருட நிறைவில் கொழும்பு கோட்டை ரயில் நிலையம்!



கொழும்பு, செப். 27

கொழும்பு கோட்டை ரயில் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதியுடன் 100 வருடங்கள் நிறைவு பெறுகின்றன.

1917 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட கொழும்பு கோட்டை ரயிர் நிலையம் பெருந்தொகையில் இரும்புகள் பயன்படுத்தப்பட்டு அக்கால பெறுமதியில் ஒரு கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் 100 ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ரயில்வேத் திணைக்களம் ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. (க)

# சுஷ்மாவின் 'திமிர் பேச்சு' சீன ஊடகங்கள் விமர்சனம்!

ஐக்கிய நாடுகள் சபையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் திமிர் பேச்சு பேசினார் என சீன ஊடகங்கள் விமர்சித்துள்ளன.

ஐ.நா. சபையில் உரையாற்றிய சுஷ்மா இந்தியாவையும், பாகிஸ்தானையும் ஒப்பிட்டு பேசியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, பாகிஸ்தான் தீவிரவாதத்தை ஆதரித்து வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், திமிர் பேச்சு எனும் தலைப்பில் செய்தி வெளியிட்டு வரும் சீன ஊடகங்கள், பாகிஸ்தானில் தீவிரவாதம் இருப்பது உண்மைதான் ஆனால் தீவிரவாதத்தை பாகிஸ்தான் ஆதரிப்பதாக இந்தியா பேசியுள்ளது. பொருளாதார ரீதியிலும் வெளிவிவகார துறையிலும் கணிசமான அளவே இந்தியா வளர்ச்சியடைந்துள்ளது.



இந்தியா அயல் நாடுகளை பகைத்துக் கொண்டு அமெரிக்கா மற்றும் பிரிட்டனுடன் வசீகரத்திற்கு உட்பட்டு வருவதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா ஊடாக பாகிஸ்தானுக்கு பாதை அமைக்கும் விவகாரத்தில் இந்தியா ஒத்துழைக்காமையால் சீனா தொடர்ந்து இந்தியாவை தாக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எம்.சி.சுப்பிரமணியத்தின் நூற்றாண்டு விழா இன்று

யாழ்ப்பாணம், செப். 27
அகில இலங்கை சிறுபான் மைத் தமிழர் மகா சபையின் முன்னாள் தலைவரும் முன் னாள் நாடாளுமன்ற உறுப் பினருமான எம்.சி.சுப்பிர மணியத்தின் நூற்றாண்டு விழாவும் மலர் வெளியீட்டு விழாவும் இன்று புதன் கிழமை பிற்பகல் 2.30 மணி யளவில் யாழ்ப்பாணம் றிம் மர் மண்டபத்தில் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் தலை வர் வி.ஜெ.அன்ரனி தலை மையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜி னோல்ட் குரே, சிறப்பு விருந் தினர்களாக ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் செயலா ளர் நாயகம் டக்ளஸ் தேவா னந்தா, மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளு மன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## தினசரி ராசி பலன் 27.09.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை. ஸப்தமித் திதி இரவு 7.08 மணிவரை. பின்னர் அட்டமி. நட்சத்திரம் கேட்டை காலை 9.57 மணிவரை. பின்னர் மூலம். சித்தயோகம் காலை 9.57 மணிவரை. பின்னர் அசுபயோகம். இன்று சரஸ்வதிப் பூஜாரம்பம்.

**ராகுகாலம்** - பகல் 12.01 மணிமுதல் 1.31 மணிவரை.
**சுபநேரம்** - மாலை 4.32 மணிமுதல் 6.03 மணிவரை.
**திவசம் செய்ய வேண்டிய திதி**- புரட்டாதி மாத வளர்பிறை ஸப்தமி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** இனிமையான நாள். உடலாரோக்கியம் திருப்தியாக இருக்கும். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். கொடுக்கல், வாங்கல் சுமுகமாக நடக்கும். குடும்பத்தில் இனிமையான சம்பவங்கள் நிகழும்.

**ரிஷபம் :** தீமையான நாள். வருமானம் குறையும். எடுக்கும் முயற்சிகள் தோல்வியடையும். வியாபாரத் தில் தேக்கநிலை உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும்.

**மிதுனம் :** சம பலன்கள் காணப்படுகின்றன. பொரு ளாதாரம் சுமாராக இருக்கும். தொழிலாளர்கள் கடும் முயற்சியின் மேல் வேலைவாய்ப்புகளைப் பெறு வார்கள். பெண்களுக்குப் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**கடகம் :** யோகமான நாள். பணம் தாராளமாகப் புழங் கும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உள்ளது. சில ருக்கு உத்தியோக உயர்வு கிடைத்து வெளிநாடு செல் லும் யோகம் உண்டாகும்.

**சிம்மம் :** உயர்வான நாள். வெளிநாட்டு உறவினர் தொடர்பும், வியாபார ரீதியான சந்திப்புகளும் பய னுள்ள வாய்ப்பாக அமையும். புத்திரர்களின் உதவிகள் கிடைக்கும்.

**கன்னி :** சஞ்சலமான நாள். மனக்குழப்பம் அதி கரிக்கும். உடல்நலம் பாதிப்புறும். வியாபாரம் நட்ட மடையும். மாணவர்களுக்கு ஞாபக சக்தி குறைவால் கல்வி ஊக்கம் குறையும்.

**துலாம் :** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்ற மடையும். வியாபாரம் விருத்தியடையும். சுயதொழில் மேன்மை அடையும். உத்தியோகத்தில் திறமைகள் பளிச்சிடும். உயர்வுகள் கிடைக்கும்.

**விருச்சிகம் :** அதிஷ்டமான நாள். வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகள் சிலருக்குக் கிடைக்கும். வியா பாரிகளுக்குத் தொழிலை விரிவுபடுத்த வங்கி உதவி கள் கிடைக்கும்.

**தனுசு :** யோசனையான நாள். வருமானம் குறையும். வெளிநாட்டுப் பயணம் கானல்நீர் போலாகிவிடும். திருமணப் பேச்சுகள் குழப்பநிலையில் இருக்கும். குடும்பத்தில் சச்சரவுகள் உண்டாகும்.

**மகரம் :** நன்மையான நாள். குடும்பத்தில் நற்காரி யங்கள் நடக்கும். உடலாரோக்கியம் சிறப்பாக இருக் கும். பெண்களின் சுயதொழில் வளர்ச்சியடையும். பணம் தாராளமாகப் புழங்கும்.

**கும்பம் :** மத்திமமான நாள். வளர்ச்சிக்குத் தடை உண்டாகும். முதலீடுகள் இல்லாத தொழிலில் ஓர ளவு ஆதாயம் கிடைக்கும். பெண்களுக்குச் சுயதொ ழிலில் தேக்கநிலை உண்டாகும்.

**மீனம் :** இன்பமானநாள். தொழில் பார்க்கும் பெண்களுக்கு உயர் பதவி, ஊதிய உயர்வு என்பன கிடைக்கும். சகோதர உதவி கிடைக்கும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும்.

சந்திராட்டமநாள்: அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆகிய நட்சத்திரக்காரர் சுபகருமங்கள் தொடங்கு வதைத் தவிர்க்கவும்.

# இந்த ஆண்டு மத்திய கிழக்கு நாடுகளுக்கு 37 ஆயிரம் பெண்கள் வேலை தேடி பயணம்!

கொழும்பு, செப். 27
இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரை மத்திய கிழக்கு நாடுகளுக்கு 37 ஆயிரம் பெண்கள் வேலை தேடிச் சென்றுள்ளனர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரம் ஒன்றில் தெரி விக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, ஒரு லட் சத்து 41 ஆயிரத்து 725 இலங் கையர்கள் வெளிநாடுகளுக் குச் சென்றுள்ளனர் எனவும் பலர் மீண்டும் திரும்பியுள்ள னர் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத் தின் புள்ளி விவரத்தில் கூறப் பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரல-

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2017ஆம் ஆண்டில் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்ற பெண் களின் எண்ணிக்கை குறை வடைந்துள்ளன.

உள்ளூர் வேலை வாய்ப்பு களில் பெண்கள் கூடுதல் கவனம் செலுத்தக்கூடிய நட வடிக்கைகள் செய்யப்பட்டுள் ளன. அடுத்து வரும் ஆண்டு களிலும் மத்திய கிழக்கு நாடு களுக்கு தொழில் தேடிச் செல் லும் பெண்களின் எண் ணிக்கை மேலும் குறைவடை யும் எனவும் அமைச்சர் நம் பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு 73 ஆயிரத்து 226 பெண்க ளும், 2016 ஆம் ஆண்டு 65 ஆயிரத்து 23 பெண்களும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைதேடிச் சென்றுள்ளனர் என்றும் அந்த புள்ளிவிவரத்தில் மேலும் கூறப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை தேடிச் செல்லும் பெண்கள் பலர் அங்கு துன்பு றுத்தப்படுவதாகவும் பலருக்கு உரிய முறையில் ஊதியங்கள் வழங்கப் படுவதில்லை என வும் வேலைவாய்ப்புப் பணி யகத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

## யாழில் நேற்று திடீர் மழை!





யாழ்ப்பாணம், செப். 27
யாழ். குடாநாட்டின் பல் வேறு பகுதிகளிலும் நேற்று காலை திடீர் மழை பெய்துள் ளது.

மழைவீழ்ச்சி நேற்றுக் காலை 06 மணி முதல் சுமார் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக நீடித்தது.

கடந்த பல நாள்களாக நீடித்து வந்த கடும் வெப்பத் துடனான காலநிலை இதன் காரணமாகச் சற்றுக் குறை வடைந்துள்ளது.

இந்த திடீர் மழைவீழ்ச்சி யால் பொதுமக்கள் மகிழ்ச்சி யடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

## மதுபானப் போத்தல்களுடன் கிந்தலெல்லவில் இருவர் கைது!

கொழும்பு, செப். 27
சட்டவிரோத 744 மது பானப் போத்தல்களுடன் இருவரை எல்லப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன், மதுபானப் போத்தல்களை ஏற்றிச் சென்ற சிறு லொறியொன்றை யும் பொலிசார் கைப்பற்றி யுள்ளனர்.

எல்ல பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன் றினையடுத்து, விரைந்து செயற்பட்ட பொலிஸார் கிந்த லெல்ல என்ற இடத்தில் பய ணித்த சிறு லொறி யொன்றை மறித்து சோதனையிட்ட போது, மேற்படி மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட் டன.

மீட்கப்பட்ட மதுபானப் போத்தல்களில் 720 பியர் போத்தல்களும் 24 சாராயப் போத்தல்களுமாக 744 மதுபானப் போத்தல்கள் உள் ளன.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின்னர் பண் டாரவளை மஜிஸ்திரேட் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படு வரென்று எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

## மன்னாரில் இரத்ததானம்





மன்னார் மெதடிஸ்த ஆலயத்தின் 134 ஆவது வருட தினத்தை முன்னிட்டு மன்னார் மெதடிஸ்த ஆலய பங்குத் தந்தை அருட்பணியாளர் க.ஜனகதாஸ் அடிகளாரின் தலை மையில் மன்னார் மெதடிஸ்த ஆலய மண்டபத்தில் இரத்த தானம் வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். (112)

## அதிபர்களுக்கான கூட்டம் நாளை

தென்மராட்சி, செப். 27
தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக் கான கூட்டம் நாளை வியாழக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (இ)

## அராலி சரஸ்வதி பரிசளிப்பு விழா

அராலி சரஸ்வதி மகாவித்தி யாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சதாசிவம் மண்ட பத்தில் அதிபர் ந.சபாரத்தின சிங்கி தலைமையில் இடம் பெறும்.

நிகழ்வில் முதன்மை விருந் தினராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் அங்கஜன் இராமநாத னும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபனும் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ)

## நாளை மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பரா மரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை -

கிளிநொச்சி பிரதேசத் தில் - ஒலுமடு சேனைப் புலவு ஒதியாமலை பட்டிக் குடியிருப்பு மருதோடை கற்குளம் கோவில்புளியங் குளம் நெடுங்கேணி மொபிட்டல் கோபுரம் நெடுங்கேணி நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங் களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித் துள்ளார். (இ)

**உலக சுற்றுலா தினம் (செப்ரெம்பர் 27) இன்றாகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை வெளியாகின்றது.**




# சுற்றுலாத்துறை இன்று விண்ணுக்குச் செல்லும் நிலைக்கு உயர்வு

உலகசுற்றுலாநாள் (World Tourism Day) உலக சுற்றுலா நிறுவனத்தின் (WTO) ஆதரவில் செப்ரெம்பர் 27ஆம் நாள் 1980 ஆம் ஆண்டிலிருந்து உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. சுற்றுலாத்துறையில் ஈடுபாடு கொண்ட உலகின் 51 நாடுகள் சுற்றுலா அமைப்புக்களின் சர்வதேச சம்மேளனத்தின் (IUOTO) 1925 இல் இணைந்து கொண்டன. பின்னர் இந்த அமைப்பு, ஐ.நாவின் கீழ் இயங்கும் ஓர் அதிகாரபூர்வமான அமைப்பாக உலகச் சுற்றுலா நிறுவனத்தை (WTO) தாபித்துக் கொண்டது. இத்தாபனத்தை அமைப்பதற்கான யாப்பு 1970 செப்ரெம்பர் 27ஆம் திகதி மெக்ஸிக்கோ நகரில் கூடிய (IUOTO) நிருவாகக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1979இல் ஸ்பெயினில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா நிறுவனத்தின் மூன்றாவது பொது அவைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உலகெங்கும் எடுத்துக்காட்டவும் சுற்றுலா எப்படி மக்களின் சமூக, கலாசார, அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை எடுத்துக்காட்டவும் இந்நாள் சிறப்பிக்கப்பட்டு வருகிறது. இந்நாளில் உலகின் பல்வேறு இடங்களில், பல்வகை கொண்டாட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உலக சுற்றுலா நாளின் பிரதான கருப்பொருள் சுற்றுலா மூலம் பொருளாதார அபிவிருத்தி, சர்வதேச புரிந்துணர்வு, சமாதானம், சுபீட்சம் என்பவற்றை அடைதலும், எவ்வித பாகுபாடுமின்றி சகலரும் மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்திரங்களையும் அனுபவிக்கவும், மதிக்கவும் உதவுதலும் இவற்றினூடாக சுற்றாடலைப் பாதுகாத்தலும், தொழில்வாய்ப்பை உருவாக்குதலும் ஆகும்.

ஒக்ரோபர் 1997இல் துருக்கியில் நடந்த உலக சுற்றுலா நிறுவனத்தின் கூட்டத்தில் ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொருநாடு இந்நிகழ்வை நடத்த அழைக்கப்படவேண்டும் என்று முடிவு





செய்யப்பட்டது. 2003இல் பீஜிங்கில் இடம்பெற்ற கூட்டத்தில் பின்வரும் ஒழுங்கு முறையில் இந்நாள் கொண்டாடப்படவேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது: இதற்கமைய 2006 இல் ஐரோப்பாவிலும், 2007இல் இலங்கையிலும், 2008 இல் அமெரிக்காவிலும் 2009இல் ஆபிரிக்காவிலும் கொண்டாடப்பட்டன. 2007இல் இலங்கையில் இந்நாள் கொண்டாடப்பட்டது. இதன் கருப் பொருள்: சுற்றுலாக் கதவுகள் பெண்களுக் குத் திறக்கப்பட்டுள்ளன (Tourism opens doors for women). என்பதாகும்.

சுற்றுலா என்பதைத் வரைவிலக்கணப்படி நோக்கின் தமது வழமையான இருப்பிடங்களை விட்டு வேறு இடங்களைக் கண்டுகளிக்க பயணிப்பதே என்று பொருள் கொள்ளலாம். போக்குவரத்தும் தொடர்புத்துறையும் மேம்பட்டு வரும் இக்காலத்தில் சுற்றுலாத் துறையும் மேற்குறிப்பிட்ட துறைகளுடன் இணைந்த வகையில் வளர்ச்சி கண்டு வருகின்றது. குறிப்பாக வசதிபடைத்த மேற்குநாட்டினரும், ஜப்பானியரும்

## நல்ல வருமானம் ஈட்டும் துறையாகவும் மாற்றம்

அதிகமாக சுற்றுலா செல்கின்றனர் என்றும் சிறந்த சுற்றுலா இடங்கள் நல்ல வருவாயை ஈட்டித்தருகின்றன

வரலாற்று ரீதியாக இத்துறை பற்றி ஆராயும் போது போக்குவரத்து, தொலைதொடர்பு. விருந்தோம்பல் துறைகள் போன்றன பழங்காலத்தில் விரிவு பெற்று இருக்கவில்லை. இதனால் பெரும்பான்மையானோர் தாம் பிறந்த கிராமங்களிலேயேதமது வாழ்க்கையைக் கழித்தனர். குடியேற்றவாதக் கொள்கை தலை தூக்கியதும் படைவீரர்கள், வணிகர்கள், சமய நோக்குடையோரும் தம்மிடத்தை விட்டு பிற இடங்களுக்கு செல்லக்கூடிய நிலை பெற்றனர்.

நவீன காலத்தில் சுற்றுலாப் பயணிகளை கவருவதற்காக பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேநேரம் நாடு கடந்து வரும் சுற்றுலாப் பயணிகளை கவருவதற்காக வேண்டி பல்வேறு ஹோட்டல் தங்குமிட வசதிகள் உணவு, பான வகைகள் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இயற்கை வனப்பு, காடுகள், வனாந்திரம், வன ஜீவராசிகள், பறவைகள், கடற்கரைகள், சுண்ணக்கற்பாறைகள் (Corals), பளிங்குப் பாறைகள் (Crystala) மலைத்தொடர், நீர்வீழ்ச்சி, மாணிக்கம், தோட்டங்கள், பூஞ்சோலைகள், அழிபாடுகள் (Ruins) என்பன பிரதான சுற்றுலாச் சொத்துக்கள் ஆகும்.

சுற்றுலாவுக்கு, இரண்டு அம்சங்கள் முக்கியமானவை: ஒன்று நேரம் மற்றையது பணம் என்று பசுபிக் ஏசிய பிரயாண சங்கத்தின் தலைமைப் பதவியிலிருந்து தீவிர சேவையின் பின்னர் இளைப்பாறிய லக்ஷ்மன் ரத்னபால ஐ.பி.எஸ்ஸிடம் கூறினார். நேரம் உள்ளவர்களிடம் பணம் இல்லை. பணம் உள்ளவர்களிடம் நேரம் இல்லை என்று அவர் விளக்கி கூறினார். மிகச் சிலரிடமே இரண்டும் உண்டு. ஆனால், உயர்மட்ட செல்வத்தை அடையும் அநேகமான நாடுகளிலேயே இந்த இரண்டும் அதிகரித்து வருகின்றன என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

உலக சுற்றுலா பயணிகளின் தொகை 2020 ஆம் ஆண்டளவில் 1.56 பில்லியனாக அதிகரிக்குமென மட்றிட்டில் தலைமை அலுவலகத்தை கொண்டுள்ள ஐக்கியநாடுகள் உலக சுற்றுலா நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. இந்த மீட்சி குறிப்பாக, உலகிலேயே மிக வேகமாக வளர்ந்துவரும் சுற்றுலா பிராந்தியமென வர்ணிக்கப்படும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் சாத்தியமாகுமென நம்பப்படுகிறது. பிராந்திய சுற்றுலாத்துறையும் புதியதொரு நடுத்தர வகுப்பின் எழுச்சியும் இந்தத் துறையை ஊக்குவிக்கின்றன.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அநேகமானோர் வறுமையிலிருந்து விடுபட்டு நடுத்தர வர்க்கத்தில் இணைந்து கொள்கிறார்கள். இந்தப் புதிய செல்வந்தர்கள் இயல்பாகவே விடுமுறையில் வெளிநாடு செல்வோருடன் இணைந்து கொள்கிறார்கள். இவ்வாறாக பிரயாணம் ஒரு விரிவடையும் அம்சமாக இருக்கிறது. இந்த அம்சம் ஒரு பழக்கமாகத் தோன்றி பின்னர் நடுத்தர வர்க்கத்தினரின் ஒரு வாழ்க்கைப் பாணியாக வளர்ச்சி அடைகிறது.

வடகிழக்கு மற்றும் தென்கிழக்கு நாடுகளுக்கு சீன, ஜப்பான் சுற்றுலாப் பயணிகள் உலக பிரயாணத்துறையை மாற்றியமைத்து விட்டனர். கடந்த 15 வருட காலத்தில், எங்குமே புதிய மத்திய வகுப்பினர் தோன்றி உலக பிரயாண முறைமையை மாற்றியமைத்து விட்டார்கள்.

நவீன இந்தியாவில் மத்திய வகுப்பினர் தொகை 30 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் மொத்த சனத்தொகையிலும் பார்க்க இது அதிகமானது. ஆனால், சீனாவின் மத்திய வகுப்பினர் தொகை இதிலும் அதிகமானது.

(13ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir



தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா



# ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...? 303

அணு ஆயுதப் போர் பரிவர்த்தனை நூறு மில்லியன் கணக்கானவர்கள் இல்லையென்றாலும் பத்து மில்லியன் கணக்கானவர்கள் கொல்லப்படுவதை மற்றும் பூமியில் உயிரினங்களது சாத்தியமான நிர்மூலமாக்கலை முகங் கொடுக்கிறது.

வடகொரியாவுக்கு எதிரான ஒரு ''தாக்கும் திறனை தடுக்கும் போர்'' (Preventive War) என்றழைக்கப்படுவது, அமெரிக்க ஏகாதிபத்தியம் மீதான ''நம்பிக்கையை'' மீளமைப்பதற்குப் பதிலாக, அமெரிக்காவை உலகம் முழுவதும் ஓர் ஒதுக்கப்பட்ட நாடாக மாற்றிவிடலாம், மேலும் ஹிட்லரின் ஜேர்மனி நடத்திய குற்றங்களுக்குப் பின்னர் முன்னுதாரணமற்ற குற்றங்களுக்காக அது புறக்கணிக்கப்படலாம். இத்தகைய குற்றங்களில் உடந்தையாய் இருந்த அமெரிக்க அரசியல் தலைவர்கள், வெளிநாடுகளில் கைது உத்தரவாணைகளுக்கு முகங்கொடுத்து அந்த அச்சங்களால் அமெரிக்காவை விட்டு வெளியேற முடியாதவர்களாக ஆகலாம்.

உண்மையில் இதுபோன்றதொரு போரிலிருந்து ஏற்படும் அரசியல், பொருளாதாரம் மற்றும் தார்மீக வீழ்ச்சி, முன்பில்லாத பரிமாணங்களில் ஓர் உள்நாட்டு நெருக்கடியைக் கட்ட விழ்த்து விட்டு, அமெரிக்காவின்




இருப்பையே கேள்விக்குட்படுத்தக் கூடும்.

பகுப்பாய்வின் இறுதியில், தற்போதைய போர் அபாயம், அமெரிக்காவின் ஒட்டுமொத்த அரசியல் அமைப்பு முறையின் தோல்வியின் விளைவாகும். அமெரிக்க அரசியல் கலாசாரத்தின் நோய்பீடித்த இந்த நிலை டொனால்ட் ட்ரம்ப் எனும் அருவருக்கத்தக்க பிரமுகரில் அதன் ஆளுருவைக் கண்டுள்ளது என்றாலும், இது அமெரிக்க மற்றும் பூகோளமயப்பட்ட முதலாளித்துவத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது, மேலும் இது இரண்டு அரசியல் கட்சிகள், ஊடகங்கள் மற்றும் முதலாளித்துவ அரசினது மற்றும் ஆளும் உயரடுக்கினது ஒவ்வொரு அமைப்பிலும் பரவியுள்ளது.




சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டதற்கு பிந்தைய ஒரு கால் நூற்றாண்டாக, அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் உலகளாவிய வீழ்ச்சியை முடிவில்லாமல் -ஆனால் வெற்றி பெறாமல்- ஆக்கிரமிப்பு போர்களைக் கொண்டு எதிர்கொள்ள முனைந்திருந்தது, இவை மில்லியன் கணக்கானவர்களைக் கொன்றுள்ளது, ஊனமாக்கியுள்ளது மற்றும் அவர்களை இடம் பெயர்த்துள்ளது.

வெளிநாட்டில் போர் என்பது உள்நாட்டில் தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கைத்தரங்கள் மற்றும் அடிப்படை உரிமைகள் மீதான ஈவிரக்கமற்ற தாக்குதல்களுடனும் முன்பினும் அதிகமாக விரிவடைந்துவரும் சமூக சமத்துவமின்மையுடனும் கைகோத்துச் செல்கிறது. ஆசியாவில் ஒரு பேரழிவுகரமான போருக்கு இட்டுச் சென்று கொண்டிருக்கும் இந்தப் பொறுப்பற்ற மற்றும் குற்றகரமான வெளிநாட்டு கொள்கை, ஹார்வி சூறாவளி போன்ற பேரழிவுகளுக்கு, மிகவும் குறைவான தயாரிப்புடன், விடையிறுப்பதில் ஆளும் வர்க்கத்தின் திராணியின்மை மற்றும் விருப்பமின்மையை எடுத்துக்காட்டுகிறது, அதேவேளையில் பரந்த சமூக செல்வங்களோ நிதியியல் தன்னலக் குழுக்களின் ஒரு சிறிய அடுக்கை செழிப்பாக்க பாய்ச்சப்படுகின்றன.

## பர்மாவின் ஆங் சான் சூகியும், மனித உரிமைகளும்

மேற்கத்திய மாநிலமான ராகினில் பர்மிய இராணுவ வெறியாட்டத்தில் இருந்து தப்பித்த நூறாயிரக்கணக்கான ரோஹிங்கியா முஸ்லிம்களின் அவல நிலை, அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் மற்றும் பர்மாவில் (மியன்மார்) அவர்களது முக்கிய அரசியல் கருவியாக செயற்பட்டுவரும் ஆங் சான் சூகி ஆகியோரால் நடை முறைப்படுத்திவரும் மனித உரிமைகள் ஏகாதிபத்தியத்தின் மோசடியால் உருவான ஒரு பேரழிவுகர வெளிப்பாடு ஆகும்.



**ஐ.நா. பொது செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் ராகினியில் நிகழ்ந்து கொண்டிருந்ததை இன அழிப்பு என்பதாக விவரித்ததோடு, ரோஹிங்கியாவின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் நாட்டை விட்டு வெளியேற நேரிட்டதை விவரிப்பதற்கு ஒரு சிறந்த வார்த்தையை நீங்கள் கண்டுபிடிக்க முடியுமா? என்றும் கேள்வி எழுப்புகிறார்.**

மேலும் சூகி ஐ ஒரு ஜனநாயக சின்னமாக ஊக்குவித்தவர்களினதும் மற்றும் ஐ.நாவினதும் பெரும் பாசாங்குத்தனத்தை எடுத்துக்காட்டும் தறுவாயாக இந்த இராணுவ நடவடிக்கைகளின் இந்தக் கொடூரமும் அளவும் இருந்து வந்தது. ஊடகமும் மனிதாபிமான அமைப்புகளும் செயற்பாட்டுப் பகுதிக்குச் செல்வதற்குத் தடை செய்யப்பட்ட போதிலும், பர்மிய இராணுவம் கிராமங்களை திட்டமிட்டு சித்திரவதை செய்துவருவது, மேலும் குடிமக்களை சிப்பாய்கள் சுட்டு வீழ்த்தி வருவது ஆகியவை குறித்த எண்ணற்ற சாட்சியங்களுக்கு கணி



சமான மற்றும் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் ராகினியில் நிகழ்ந்து கொண்டிருந்ததை இன அழிப்பு என்பதாக விவரித்ததோடு, ரோஹிங்கியாவின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் நாட்டை விட்டு வெளியேற நேரிட்டதை விவரிப்பதற்கு ஒரு சிறந்த வார்த்தையை நீங்கள் கண்டுபிடிக்க முடியுமா? என்றும் கேள்வி எழுப்புகிறார். ஐ.நா. பாதுகாப்புச் சபை வெளியிட்ட ஓர் அறிக்கை, அதிகப்படியான வன்முறை குறித்த அறிக்கைகள் பற்றி கவலையை வெளிப்படுத்தியது, மேலும் நிலைமை இன்னும் மோசமடையாதிருக்கவும், குடிமக்களை பாதுகாக்கவும் மற்றும் அகதிகள் பிரச்சினையை தீர்க்கவும் நடவடிக்கைகள் எடுக்கவும் முறையீடு செய்தது.

பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி போரிஸ் ஜான்சன் அண்மையில், இராணுவத்தைக் கட்டுப்படுத்துவதில் சூகீ அவரது செல்வாக்கை பயன்படுத்த வேண்டுமென்று முன்வைக்கப்படும் சர்வதேச கூட்டு அழைப்பில் தானும் இணைந்தார். ஆங் சான் சூ கீ நமது தலைமுறையின் மிகவும் உற்சாகமூட்டும் நபர்களில் ஒருவராக சரியாக கருதப்படுகிறார், என்றாலும் ரோஹிங்கியாவின் நடைமுறை பர்மாவின் கீர்த்தியை அவமதிப்பதாகவுள்ளது என்று அவர் அறிவித்தார்.

இராணுவத்தின் இந்த இன அழிப்பு ஒரு தசாப்தத்திற்கு முன்னர் பர்மிய இராணுவ ஆட்சி சூகி ஐ வீட்டுக் காவலில் வைத்திருந்தபோது நடந்திருந்தால், அதற்கான எதிர்வினை மிகவும் வித்தியாசமாக இருந்திருக்கக் கூடும். மோசடி ஆட்சியின் மேற்கத்திய ஏகாதிபத்தியத்தில் இருந்து கண்டனங்களும், மனித உரிமை மீறல்கள் பற்றிய அதன் நீண்ட வரலாற்றின் பழிப்புரைகளும் எழுந்திருக்கக்கூடும், மேலும் பர்மாவிற்கு எதிராகக் கடுமையான இராஜதந்திர மற்றும் பொருளாதாரத் தடைகள் குறித்த நகர்வுகளும் இருந்திருக்கும்.

**உலகம் முழுவதிலுமான பிரச்சினையாக இருக்கின்ற நிலையில், பர்மாவில் அடிப்படை ஜனநாயக உரிமைகளை வளர்ப்பதில் அமெரிக்கா ஒருபோதும் சிறிதும் அக்கறை காட்டவில்லை.**

பர்மாவில் நிகழ்ந்த சமீபத்திய இராணுவ கொடுஞ்செயல்கள் குறித்து வொஷிங்டன் இப்போது எப்படி மென்மையான மெத்தனப்போக்கைக் கொண்டுள்ளது? உலகம் முழுவதிலுமான பிரச்சினையாக இருக்கின்ற நிலையில், பர்மாவில் அடிப்படை ஜனநாயக உரிமைகளை வளர்ப்பதில் அமெரிக்கா ஒருபோதும் சிறிதும் அக்கறை காட்டவில்லை. மாறாக பர்மிய இராணுவ சர்வாதிகாரத்தின் மீதான அதன் அணுகுமுறை எப்போதும் பொருளாதார மற்றும் மூலோபாய நலன்களால் அதிலும் குறிப்பாக, சீனாவுடனான ஆட்சிக்கு நெருக்கமான உறவுகள் மீதான வொஷிங்டனின் விரோதத்தினால் தீர்மானிக்கப்பட்டது.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



108




**அத்தியாயம் - VII**

## பெண் போராளிகள் பற்றிய புதிய பார்வை

கோட்டை இராணுவத் தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாண நகரிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழ்ந்த மக்களுக்கு அமைதியான - பாதுகாப்பான - சூழல் பிறந்தது. அரசியல் நடவடிக்கைகளின் மையமாக விளங்கிய யாழ்ப்பாண நகரத்தில் குடியமர நாமும் முடிவெடுத்தோம். இந்த இருப்பிடம் பாலாவின் அரசியல் வேலைகளுக்கு வசதியாக அமைந்தது. அத்தோடு, இங்கிருந்து விடுதலைப் புலிகளின் தலைவர்களையும் போராளிகளையும் அவர் அடிக்கடி சந்தித்துப் பேச முடிந்தது. பெண்போராளிகளும் பல அரசியல் சிக்கல்களை எதிர்கொள்ள நேர்ந்தது. அவர்கள் என்னிடம் வந்து இவை பற்றி விவாதிப்பார்கள். இவர்களில் ஒருவர் காயத்திரி. இவர் ஒரு மூத்த பெண் போராளி. 'சுதந்திரப் பறவைகள்' என்ற பெண்களுக்கான மாத இதழுக்கு ஆசிரியையாகப் பணி புரிந்தவர். தனது சஞ்சிகையின் வளர்ச்சிக்காகப் புதிய கருத்துக்களைத் தேடி காயத்திரி என்னிடம் அடிக்கடி வருவார். அப்பொழுது பெண்களின் இராணுவப் பிரிவுக்குத் தளபதியாகப் பணி புரிந்தவர் ஜெயந்தி. அரசியல் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்தவர் ஜெயா. இவர்கள் இருவரும் வடமராட்சியைச் சேர்ந்தவர்கள்.

1985 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில், பெண்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சிப் பாசறையில் முதலாவது அணியாகப் பயின்றவர்கள். அடுத்து, மூத்த பெண் போராளி தீபா. தீபாவும் ஜெயாவும் ஆரம்பத்தில் சென்னையில் எமது வீட்டில் வசித்து வந்தவர்கள். ஜெயந்தி, ஜெயா, தீபா ஆகிய மூவரும் எமக்கு நெருக்கமானவர்கள். எமது இருப்பிடத்துக்கு அடிக்கடி வருவார்கள். ஜெயந்தி, என்னையும் பாலாவையும் தனது பயிற்சி முகாம்களுக்கு அழைத்து விருந்து தருவார். அந்தவேளை, ஜெயந்தியின் பொறுப்பில், தென்மராட்சியிலுள்ள கிளாலியிலும், வடமராட்சியிலுள்ள பொலிகண்டியிலும் இரு பெரும் பயிற்சிப் பாசறைகள் அமைந்திருந்தன. இங்கு நாம் அடிக்கடி அழைக்கப்பட்டிருக்கிறோம். பாலா என்னோடு இங்கு வரும் பொழுது அன்றைய அரசியல் நிலைமையை விளக்கிப் பெண் போராளிகளுக்கு வகுப்புகளை நடத்துவார்.

இப்பொழுது, யாழ்ப்பாணத்தில் பெண் போராளிகள் பற்றிய படிமம் அடிப்படையான மாற்றத்தைக் கண்டிருந்தது. 1990 ஆம் ஆண்டில் இந்திய அமைதிப் படை வெளியேறியதை அடுத்து, ஆயுதம் தாங்கியபடி கம்பீரமான சீருடை அணிந்து யாழ்ப்பாண வீதி வழியே வலம் வந்த பெண் போராளிகளுக்கும் அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக இந்திய இராணுவப் படையெடுப்பின் போது சாதாரண உடையுடன் வன்னிக்குப் பின்வாங்கிய பெண் போராளிகளுக்கும் மத்தியில் அடிப்படை வேறுபாடு இருக்கத்தான் செய்தது. இப்போதைய பெண் போராளிகள் சிறந்த போர்ப் பயிற்சி பெற்றவர்கள்; நிறைய கள அனுபவம் உடையவர்கள்; தன்னம்பிக்கை நிறைந்தவர்கள். இவ்வாறான புதிய பெண் போராளிகள், அணி அணியாகக் காவல் வலம் வருகின்றமையைக் கண்டு வியப்படைந்த பொதுமக்கள், சமுதாயத்தில் ஒரு புரட்சிகர மாற்றம் நிகழ்ந்துள்ளதை உணர்ந்தனர். இது சர்ச்சைக்குரிய விவாதங்களை எழுப்பியது. பெண் போராளிகளின் இலட்சியப் பற்றையும் அர்ப்பணிப்புகளையும் தமிழ் மக்கள் போற்றிப் பாராட்டத் தவறவில்லை. ஆயினும், அதேவேளை, ஆயுதப் போராட்டம் தமிழ்ப் பெண்களின் படிமத்திலும் பாரம்பரிய பங்குகளிலும் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தி விடுவது சாத்தியமென்றும் மக்கள் அஞ்சினார்கள். மரபுக்கும் மாற்றத்துக்கும் மத்தியில் காலம் காலமாக நடைபெற்றுவரும் விவாதம் இது. பெண் போராளிகளை மையமாகக் கொண்டு இப்பொழுது இந்தச் சர்ச்சை மீண்டும் தலை தூக்கியிருக்கிறது. நீளமாக முடி வளர்ந்து, சேலை உடுத்தி அல்லது பாவாடை அணிந்து, தலை குனிந்தபடி பணிவடக்கத்துடன் நடந்து செல்லும் பண்டைய தமிழ் இளம் பெண்ணின் படிமத்தோடு பழகிய யாழ்ப்பாணத்து பழைமைவாதிகளில் சில பிரிவினருக்கு, திருமணமாகாத இளம் பெண் போராளிகள் ஆயுதம் தரித்தபடி, சீருடையுடன் வீதிகளில் வலம் வருகின்றமை தமிழ்ப் பாரம்பரிய மரபுக்கும் பண்பாட்டுக்கும் ஆபத்தான அச்சுறுத்தலாகவே தென்பட்டது.



வீடு தோறும் விவாதங்களும் சர்ச்சைகளும் கிளர்ந்தன. இயற்கை, செயற்கை என்றும், மரபு மாற்றம் என்றும் சாதாரண பகுத்தறிவு மட்டத்தில் தர்க்கங்கள் சூடுபிடித்தன. ஆயுதம் தரித்த விடுதலைப் போராளிகளாகப் பெண்கள் புதிய பங்கு வகிக்கின்றமையை விரும்பாத சிலர், அது இயற்கைக்கு மாறானதென வாதிட்டனர். இயற்கைதான் பெண்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தி. ஆண்களைவிடப் பெண்கள் பலவீனமானவர்கள் மட்டுமன்றி, குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதே வாழ்க்கையில் பெண்கள் வகிக்கும் முக்கியமான பங்கு என்பது இவர்களது கருத்து. வாழ்வின் நியதியாக இயற்கையால் அருளப்பட்ட இந்தப் பங்கைப் பெண்கள் மீறுவார்களானால் அதன் விளைவு பாரதூரமாக அமையும் என்றும், அது சமூகக் கட்டமைப்பையும் ஒழுங்கையும் சீர்குலைத்து விடும் என்றும் இவர்கள் வாதிடுவர். திருமணத்துக்கும் குடும்ப வாழ்வுக்கும் அச்சாணியாக விளங்குபவள் பெண் என்றும், இந்த உறவுமுறைகளுக்கு மாறாக அவள் சிந்தித்தாலும், செயற்பட்டாலும் அது குடும்பத்தை மையமாகக் கொண்ட தமிழ்ப் பண்பாட்டுக்குப் பங்கம் ஏற்படுத்திவிடும் என்பதும் ஒரு சாராரது கருத்து. தமிழ்ப் பெண்களையும் யாழ்ப்பாண சமூகத்தையும் பொறுத்தவரை, 'பெண் விடுதலை' என்பது அவசியமில்லை என்ற பிற்போக்கான வாதத்தை முன்வைப்பவர்களும் இருக்கிறார்கள். இந்த வாதங்கள் எல்லாமே தவறானவை என்பதும், பொருத்தமற்றவை என்பதும் எனது கருத்து. தமிழ்ப் பெண்களுக்கான விடுதலை எவ்வாறு அமைய வேண்டும் என்பதில் தெளிவான பார்வை இல்லாத காரணத்தாலேயே இந்தத் தவறான கருத்துகள் எழுகின்றன. ஆயுதப் போராட்டத்தில் பெண்கள் பங்குகொள்கின்றமை என்பது, தமிழ் சமுதாயத்தில் பெண்களின் வாழ்நிலை சம்பந்தப்பட்ட மட்டில், ஒரு புரட்சிகரமான மாற்றத்தைக் குறிக்கின்றது என்பது உண்மை. எனினும், பெண்களின் மீட்சி என்பது ஆயுதப் போராட்டத்தில் பங்குகொள்கின்றமையோடு முடிவடைவதில்லை. மாறாக, பரந்த குறிக்கோள்களை அடையும் நோக்கத்துடனேயே பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் குதிக்கிறார்கள். இந்தப் பரந்த குறிக்கோள்கள் என்ன என்பது பற்றிய விவாதம், ஆரம்ப காலத்தில், யாழ்ப்பாண சமூகத்தில் பெரிதாக எழவில்லை. ஆயுதம் தரித்த பெண்ணின் உருவகம் மட்டுமே முக்கியமாகத் தென்பட்டது. இதனால், யாழ்ப்பாண சமூகத்தில் ஆயுதம் தரித்த பெண்ணின் வடிவமே பெண் விடுதலையின் குறியீடாகத் தோற்றம் எடுத்தது.

இந்தப் படிமம், பரந்துபட்ட பெண் சமூகத்தினரையும் பொதுமக்களையும் கவர்ந்து விடவில்லை. அத்தோடு, பெண் போராளிகள் தமது நீண்ட கருங்கூந்தலைக் கத்தரித்து விடுவதென மேற்கொண்ட துணிச்சலான தீர்மானம் பெரிய சர்ச்சையைக் கிளப்பியது. தமது நீண்ட முடியை இரட்டையாகப் பின்னி, சுற்றி வளைத்துக் கட்டுவதுதான் பெண் போராளிகளின் பாணியாக இருந்தது. ஆனால், திடீரெனக் குறுக வெட்டிய முடியுடன் பெண் போராளிகள் தென்பட்ட போது, அது சமூகத்தில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது. கண்டனங்களும் கிளம்பின. தமிழ்ப் பண்பாட்டுக்கு விரோதமான நடவடிக்கையெனப் பெண் போராளிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. ஆனால், பெண் போராளிகள் இது பற்றிப் பெரிதும் அலட்டிக் கொள்ளவில்லை. விரும்பினால் முடியைக் குறுக வெட்டலாம் என்ற இயக்கத்தின் முடிவு பெண் போராளிகள் மத்தியில் அமோக வரவேற்பைப் பெற்றது.

நேரத்தைப் பிடிக்கும் சிகை அலங்கார மரபிலிருந்து விடுபடுவதற்குத் தமக்கு வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு அவர்களுக்கு மகிழ்ச்சி. ஆனால், உண்மையில் இந்த முடிவு இராணுவத் தேவைக்காக மேற்கொள்ளப்பட்டது. போர்ப்பயிற்சியின் போதும், போர் நடவடிக்கைகளின் போதும் நீண்ட பின்னிய முடிகளை வைத்திருப்பது, இளம் பெண்களுக்கு ஒரு தொல்லை கொடுக்கும் விடயம். எனினும், எல்லாப் பெண் போராளிகளுமே முடியைக் குறுக வெட்டவில்லை. அநேகமானோர் இரட்டையாக முடியைப் பின்னி, அவர்களது பாணியில் சுற்றி வளைத்துக் கட்டுவார்கள். என்னைப் பொறுத்தவரை யில், முடியை எவ்விதம் வைத்துக்கொள்வது என்பது பற்றி ஒரு தேர்வுச் சுதந்திரம் அவர்களுக்கு உண்டு என்பது ஒரு முற்போக்கான விடயமே.

(தொடரும்...)

உலக கருத்தடை தினம் நேற்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது.

# வைத்தியரின் அறிவுறுத்தல் இன்றி



# கருத்தடை மாத்திரை எடுப்பது ஆபத்து!

முறை தவறிய மாதவிலக்கு... அதன் தொடர்ச்சியாக அதிகரிக்கிற பருமன் பிரச்சினை... பின்னாளில் குழந்தையின்மையில் முடிகிற சோகம்... இப்படிப் பெண்கள் சந்திக்கிற அநேகப் பிரச்சினைகளுக்கும் முக்கியமான காரணம் ஒன்றே என்கிறது ஆய்வு ஒன்று. அது, அளவுக்கு அதிகமான கருத்தடை மாத்திரை (எமர்ஜென்ஸி பில்ஸ்) உபயோகம்.

'கருத்தடை மாத்திரைகளை விற்கும் மருந்துக் கடைக்காரர்கள், வாடிக்கையாளர்களுக்கு அதன் பக்க விளைவுகளையும் பயங்கரங்களையும் விளக்கிச் சொல்ல வேண்டும்' என்கிறது சட்டவிதிமுறை. ஆனால், 79 சதவிகித மருந்துக்கடைக்காரர்களுக்கே கருத்தடை மாத்திரைகளைப் பற்றிய விழிப்புணர்வு இல்லை என்கிறது ஆய்வறிக்கை. மீதமுள்ளோரும் வாடிக்கையாளர் தானாக விரும்பிக் கேட்டால் மட்டுமே ஆலோசனை சொல்கிறவர்களாக இருக்கிறார்கள்.

கருத்தடை மாத்திரை என்பது தேவையின்றி கர்ப்பம் உருவாவதைத் தடுக்கக்கூடியது மட்டுமே என்பதையும், பால்வினை நோய்த்தொற்றைத் தடுக்கும் சக்தி அதற்குக் கிடையாது என்பதையும்கூட அறியாமல் இவற்றை வாங்கி உபயோகிக்கிற இளம் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது அதிர்ச்சித் தகவல்.

'ஒரு பெண் வாழ்நாளிலேயே கருத்தடை மாத்திரைகளை ஓரிரு முறைதான் பயன் படுத்தலாம். ஆனால், மாதத்துக்கு ஒருமுறை, இருமுறை பயன்படுத்துபவர்களும் இருக்கிறார்கள். இது ஏராளமான பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்'' என அவசர அவசிய எச்சரிக்கை அளிக்கிறார்கள் மருத்துவர்கள்.

'எல்லா கருக்கலைப்புகளும் (அபோர்ஷன்களும்) பாதுகாப்பான முறையில் மருத்துவர்களால், முறையான மருத்துவமனைகளில்தான் நடக்கின்றன எனச் சொல்ல முடியாது. அனுபவமே இல்லாதவர்களால் பாதுகாப்பு இல்லாத முறைகளில் நிறையக் கருக்கலைப்புகள் நடக்கின்றன. இன்னமும்கூட கருக்கலைப்புக்குத் தவறான வழிமுறைகளைப் பின்பற்றும் பழக்கம் நம் ஊர் பெண்களிடம் இருக்கிறது.

இந்தப் பிரச்சினையைத் தவிர்ப்பதற்கு கருத்தடை மாத்திரைகள் உதவும் என்பது உண்மைதான். அதேநேரம், கருத்தடை மாத்திரைகளையும் மிக ஜாக்கிரதையாகத்தான் பயன்படுத்த வேண்டும். மாதத்துக்கு ஒரு முறை, இருமுறை என மிக அதிக அளவில் பயன்படுத்துபவர்கள்கூட இருக்கிறார்கள்.

இந்தக் கருத்தடை மாத்திரைகளை அடிக்கடி எடுத்துக்கொள்கிறவர்களுக்கு ஹார்மோன் தொந்தரவுகள் ஏற்படுவது உறுதி. ஒரே மாதத்தில் இந்த மாத்திரைகளை 2 முறை எடுத்துக் கொண்டு, அது பலன் தந்திருக்கலாம். மூன்றாவது முறை எடுக்கும்போது அதே மாத்திரை வேலை செய்யாமல் போகும். பெண்களின் மாதவிலக்கு சுழற்சி, முறை தவறிப் போகவும் இது காரணமாகும். அதிக ரத்தப்போக்கு, வலி ஆகியவற்றோடு மனக்குழப்பங்கள் ஏற்படவும் செய்யலாம்.

உறவு வைத்துக்கொண்ட 72 மணி நேரத்துக்குள் கருத்தடை மாத்திரை எடுக்கவில்லை என்றால், கர்ப்பம் உண்டாகி கருவளரலாம். இடையிடையே ரத்தப்போக்கும் வரலாம். அதனால் அவசரத் தேவைக்கு கருத்தடை மாத்திரை கிடைக்க வேண்டும் என்கிறார்கள். ஆனால், பெண்களுக்கு சரியான

**கல்லீரல் பிரச்சினை உள்ளவர்கள், வலிப்புக்கும் நரம்புக் கோளாறுகளுக்கும் மருந்துகள் எடுத்துக்கொள்கிறவர்கள் எல்லாம் இந்த மாத்திரைகளை எடுக்கக்கூடாது. இந்தப் பெண்களுக்கு கருத்தடை தேவைப்பட்டால் அவர்களது உடல்நலம் பற்றித் தெரிந்த மருத்துவரைக் கேட்டே எடுக்க வேண்டும்.**

விழிப்புணர்வு இல்லாததால், இந்த மாத்திரைகளை அளவுக்கு அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். இந்த மாத்திரைகளை உபயோகிப்பது தொடர்பான விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டியதும் அரசின் அவசர கடமை.

ஒருவருக்குத் தொடர்ந்து கருத்தடைக்கான தேவை இருக்கிறது என்றால், அவர்கள் இந்த மாத்திரைகளைத் தவிர்த்து, வேறு வழிமுறைகளைப் பின்பற்றலாம். ஆணுறை உபயோகிப்பது, குடும்பக்கட்டுப்பாட்டு மாத்திரை எடுத்துக்கொள்வது, 'காப்பர் டி' போட்டுக்கொள்வது என மூன்று முக்கியமான வழிகள் உள்ளன. இதில் ஆணுறை உபயோகிப்பதில் 20 முதல் 25 சதவிகிதம் தோல்விக்கான வாய்ப்புகள் உண்டு.

குடும்பக்கட்டுப்பாட்டு மாத்திரைகளில் 0.2 சதவிகிதமும், 'காப்பர் டி'யில் 1.5 முதல் 2 சதவிகிதம் வரையிலும் தோல்வி வாய்ப்புகள் உண்டு. அதிலும் 'காப்பர் டி' என்பது திருமணமாகி ஒரு குழந்தை பெற்றவர்களுக்குத்தான் பரிந்துரைக்கப்படும். குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரைகளையும் மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் எடுப்பது ஆபத்தானதுதான்'' என்கிறார் மருத்துவர்கள்

**கருத்தடை மாத்திரைகள் எப்படி வேலை செய்கின்றன?**

'கர்ப்பப்பைவாய் பகுதியில் ஒரு வகையான திரவம் இருக்கும். கருமுட்டை வெடிக்கிற தருணத்தில் அது மிகவும் சன்னமாக மாறிவிடும். இந்த 'எமர்ஜென்சி' மாத்திரைகளை எடுத்துக் கொள்வதன் மூலம் உயிரணு உள்ளே செல்ல முடியாத அளவுக்கு அது அடர்த்தியாக மாறும். அதனால் கருமுட்டை வெடிப்பது தவிர்க்கப்படுகிறது அல்லது தாமதப்படுகிறது... இதுதான் இம்மாத்திரைகளின் அடிப்படை.

கருத்தடை மாத்திரைகளில் புரொஜெஸ்ட்ரோன் மட்டும் சேர்த்தது, ஈஸ்ட்ரோஜென் மட்டும் சேர்த்தது, இரண்டும் கலந்தவை என மூன்று வகைகள் கிடைக்கின்றன. கடைகளில் பெரும்பாலும் புரொஜெஸ்ட்ரோன் மட்டும் சேர்த்ததுதான் கிடைக்கிறது. மற்ற இரண்டையும்விட இது ஓரளவு பாதுகாப்பானது என்றாலும், யாருக்கு எந்த வகையைப் பரிந்துரைப்பது என்பதை மருத்துவர் மட்டுமே அறிவார்.

கல்லீரல் பிரச்சினை உள்ளவர்கள், வலிப்புக்கும் நரம்புக் கோளாறுகளுக்கும் மருந்துகள் எடுத்துக்கொள்கிறவர்கள் எல்லாம் இந்த மாத்திரைகளை எடுக்கக்கூடாது. அந்தப் பெண்களுக்கு கருத்தடை தேவைப்பட்டால் அவர்களது உடல்நலம் பற்றித் தெரிந்த மருத்துவரைக் கேட்டே எடுக்க வேண்டும்.

அவசரத்துக்கு என்று சொல்லிக் கொடுக்கப்படுகிற இந்த மாத்திரைகளை அடிக்கடி எடுத்துக் கொள்ள ஆரம்பித்தால், பருமன் அதிகரித்தல், உடல் ஊதியது போன்ற உணர்வு, மார்பக வலி, தலைவலி, மாதவிலக்குச் சுழற்சி, முறைதவறிப் போவது, பருக்கள் உண்டாவது போன்ற பலவித பக்க விளைவுகள் வரலாம். மாதவிலக்குச் சுழற்சி முறையாக உள்ள பெண்களுக்கு மட்டும்தான் இந்த மாத்திரைகள் பலனளிக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கருத்தடை மாத்திரை மட்டுமல்ல... மருத்துவர் ஆலோசனை இன்றி, உடலுக்கு ஊறுவிளைவிக்கின்ற வகையில் எந்த மாத்திரையையும் உட்கொள்ளக் கூடாது என்பதே இங்கு மீண்டும் வலியுறுத்தப்பட வேண்டிய விஷயம்!

**கருத்தடை மாத்திரைக்கு தடை... கருக்கலைப்பு அதிகரிக்கக் காரணமா?**

வடஇந்தியாவில் மிக இளம் வயதுப் பெண்கள் இந்த மாத்திரைகளை மாதத்தில் 3 முறைகளுக்கு மேல் எடுத்துக்கொள்கிற வழக்கம் அதிகரித்து வருவதை அடுத்து, மருத்துவரின் பரிந்துரையின்றி, இவற்றை வாங்கி உபயோகிக்கத் தடைபோடப்பட வேண்டும் என மருத்துவர்கள் மத்தியிலேயே ஒரு குரல் வலுத்து வருகிறது.

அதற்கு நேர் எதிராக தமிழ்நாட்டில் இந்த மாத்திரைகளை நேரடியாக மருந்துக்கடைகளில் வாங்க 10 ஆண்டுகளுக்கும் மேலாகத் தடை நீடிக்கிறது. இந்தியாவில் அதிக அளவு கருக்கலைப்பு நடக்கும் மாநிலங்களில் முன்னிலையில் இருக்கிறது தமிழ்நாடு. இந்த எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்துக்கொண்டும் இருக்கிறது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழகத்தில் கருத்தடை மாத்திரைகளை நேரடியாக வாங்கி உபயோகிப்பதற்கு 2006ஆம் ஆண்டு முதல் அமுலில் இருக்கும் தடையைத்தான், இதற்கு முக்கிய காரணம் என்று சிலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

''இது பெண்களின் உரிமையைப் பறிக்கிற விடயம் மட்டுமே அல்ல. அவர்களது உடல் தொடர்பான முடிவுகளை எடுப்பதில், அவர்களைக் கட்டுப்படுத்துகிற விடயமும்கூட. ஆகவே, உடனடியாக இந்தத் தடை நீக்கப்பட வேண்டும்' என்கிற கோரிக்கை இப்போது வலுப்பெற்று வருகிறது.

''அபோர்ஷன் என்பது வலிகளும் வேதனைகளும் மிக்கது. எந்தப் பெண்ணும் அதை அனுபவிக்கத் தயாராக இருக்க மாட்டாள். அதனால் கர்ப்பத் தடை மாத்திரைகளுக்கு அதிக கட்டுப்பாடு இருப்பது பெண்ணின் ஆரோக்கியத்துக்குத்தான் ஆபத்து. ★



# ஊறுவிளைவிக்கும் உணவுப்பொருள்களின் இறக்குமதிக்கு தடை; ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, செப். 27

அத்தியாவசியமற்ற உடல் ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்கும் அனைத்து உணவு பொருள்களினதும் இறக்குமதியை நிறுத்துவதற்கு தேசிய பொருளாதார பேரவை ஊடாக நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கிறோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

களுத்துறை போம்புவல சேவைக்கால பயிற்சி நிறுவனத்தின் விவசாயக் கண்காட்சியை நேற்றுமுன்தினம் பிற்பகல் ஆரம்பித்து வைக்கும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் இறக்குமதிக்கு மட்டும் 2,500 கோடி ரூபாவுக்கும் கூடுதலான பணம் செலவிடப்படுவதாகவும் ஆயிரக்கணக்கான ஆண்டு நாட்டின் பண்பாட்டையும் தனித்துவத்தையும் பாதுகாத்து எமக்குத் தேவையான உணவுப் பொருட்களை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டியது கட்டாயமான ஒன்று.

உள்நாட்டு விவசாயிகளின் உற்பத்திகளுக்கு சிறந்த விலையை வழங்கி அவர்களது பொருளாதாரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் பலப்படுத்த வேண்டுமாயின் எமது பொருள்களுக்கு கூடுதல் பெறுமானம் வழங்க வேண்டும்.

கடந்த சில மாதங்களில் நாட்டில் ஏற்பட்ட வறட்சி மற்றும் வெள்ளம் காரணமாக விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்து நாட்டின் விவசாயத்துறையில் புதிய மாற்றத்தை உருவாக்குவதற்காக தேசிய உணவு உற்பத்தி மறுமலர்ச்சித் திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப் படவுள்ளது. அதற்காக அனைத்து நிறுவனங்களுக்கும் சுற்று நிருபங்கள் மற்றும் ஆலோசனைகள் அனுப்பப்பட்டுள்ளன.







உள்நாட்டு வெங்காய விவசாயிகள் முகங்கொடுக்கும் நெருக்கடியை கருத்தில் எடுத்து உடனடியாக செயற்படும் வண்ணம் இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்திற்கு நூறு வீத வரியை விதிக்குமாறு நிதி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

விவசாய மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் அரச மற்றும் தனியார்துறையில் உள்ள அனைத்து காணிகளிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள எதிர்பார்ப்பதுடன், விவசாயத்தில் ஈடுபடுபவர்களை ஊக்குவிப்பதுடன், விவசாயத்தில் ஈடுபடாதோர் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

சட்டம் மற்றும் அரசமைப்புக்கு அமைவாகவன்றி மனிதாபிமான செயலாக கருதி நாட்டின் வறுமையை அகற்றி அனைத்து மக்களினதும் பட்டினியை போக்கும் விவசாய மறுமலர்ச்சியுடன் அனைவரும் இணைந்துகொள்வார்களென நம்புகின்றேன்.

அனைத்து நாடுகளும் ஐக்கிய நாடுகள் அமைப்பு உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளினதும் நட்புறவும் ஆசீர்வாதமும் குறைவின்றி இலங்கைக்கு கிடைத்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விவசாய கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்ட ஜனாதிபதி, 46 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட போம்புவல சேவைக் கால பயிற்சி நிறுவனத்தின் இருமாடிக் கட்டடத்தையும் திறந்து வைத்தார்.

‘வளமான வாழ்வுக்கு - விவசாயமே பலம்’ எனும் தொனிப் பொருளிலான விவசாய மறுமலர்ச்சி தேசிய திட்டத்தின் கீழ் மேல் மாகாண விவசாய அமைச்சும் மாகாண விவசாய திணைக்களமும் ஏற்பாடு செய்துள்ள கண்காட்சி இன்று வரை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, மேல் மாகாண ஆளுநர் கே.சி.லோகேஸ்வரன், முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய, மேல் மாகாண விவசாய அமைச்சர் காமினி திலகசிறி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# பிக்குமாருக்குத் தானமளித்து சமஷ்டிக்கு ஆதரவு பெற முயற்சி!

## உதயகம்மன்பில குற்றஞ்சாட்டுகிறார்



கொழும்பு, செப். 27

நாடளாவிய ரீதியில் முக்கியமான பிக்குமாருக்கு தானமளித்து சமஷ்டி அடிப்படையிலான அரசமைப்புக்கு ஆதரவைப் பெற அரசு முயற்சிக்கிறது என உதயகம்மன்பில குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை பத்தரமுல்லையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று புதன்கிழமை அலரி மாளிகையில் பிக்குமாருக்கான அன்னதான நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதற்காக பொலிஸார் மூலமாக பிக்குமாருக்கான அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், அவ்வாறு வருகைதரும் பிக்குமாருக்கும் தனியான வாகனவசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த அன்னதான நிகழ்வின் மூலமாக சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வுக்கு பௌத்த பிக்குமாரின் ஆதரவைப்பெற அரசு முயற்சிக்கின்றது.

சர்வதேசத்தின் உதவியுடன் நோர்வே சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்கு அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றது.

எனவே, பௌத்த பிக்குமார் அலரிமாளிகை அன்னதான நிகழ்வைப் புறக்கணித்து சமஷ்டிக்கான தங்கள் எதிர்ப்பைத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

## சுற்றுலாத்துறை...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகள் அதிக வளங்களைப் பெறுவதால் பிராந்தியத்திற்குள்ளான பிரயாணங்கள் தொடர்ந்தும் விருத்தியடையும் என்பதும் தெரிவிக்கப்படுகிறது. பொதுவாக உலக நாடுகளின் சுற்றுலாத்துறையின் ஆசியாவுக்குள் பிரயாணங்கள் அதிகரிக்கலாம் என்பதும் பொதுவான எதிர்பார்க்கையாகும்.

மூன்றாம் உலக நாடுகளில் சுற்றுலா பெரும் வருவாய் ஈட்டித்தரும் துறையாகப் நோக்கப்பட்டாலும் பல கேடுகளையும் செலவுகளையும் கொண்டுள்ளதையும் அவதானித்தல் வேண்டும். எனவே, சுற்றுலாத்துறை வருமானத்தை ஈட்டித்தரும் அதேவேளை சுற்றாடலுக்கு அது அச்சுறுத்தலாகவும் அமைகிறது. சுற்றுலாவுக்கு அடிப்படையானது சுற்றாடலாகும். திட்டமில்லாத, கட்டுப்பாடில்லாத சுற்றுலா, சுற்றாடலில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

மேற்குநாட்டினரை மூன்றாம் உலக நாடுகளுக்கு ஈர்ப்பதற்காக அவர்களுக்குத் தேவையான உயர் வசதி படைத்த வலயங்களை மூன்றாம் உலக நாட்டு அதிகார வணிக வர்க்கத்தினர் பெரும் செலவில் கட்டுகின்றனர். இவ்வாறான கட்டடங்கள் அத்தியாவசிய கட்டமைப்பு மற்றும் சேவைகளை புறம் தள்ளியும் கட்டப் படுகின்றன. இத்தகைய வலயங்கள் நாட்டுக்குள்ளே இருக்கும் ஏற்றதாழ்வை பெரிதாக்குகின்றன. சுற்றுலாத்துறையால் கிடைக்கும் வருவாயும் பொது மேம்பாட்டிற்கு செல்லாமல் அதிகார வட்டத்திற்கே போய்சேருவதாகவும் விமர்சகர்கள் சாடுகின்றனர்.

ஹோட்டல் கழிவுகள், நீர் மாசமடைதல், சட்டவிரோத குடிசைகளும், விடுதிகளும், சுண்ணக் கற்பாறை அகழ்வு போன்றன சுற்றாடலைப் பாதிக்கின்றன. இதைவிட மறைமுகமாக சுற்றுலாத்துறையுடன் சங்கமித்துள்ள பாலியல் சுற்றுலா, கடற்கரைச் சிறுவர்கள், போதைவஸ்து பாவனையும் கடத்தலும், அந்நியரின் அரை நிர்வாணப்பவனி, கசினோ சூதாட்டம் என்பன பௌதீகச் சுற்றாடலை மட்டுமன்றி பண்பாட்டுச் சூழலையும் சீரழிக்கின்றன. இலங்கை, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் பாலியல் சுரண்டலில் ஈடுபடுவதற்காவும் பல வெளிநாட்டு பயணிகள் வருகின்றார்கள். ஏழைச் சிறுவர்கள், பெண்கள் என பலர் இவ்வாறு இழிவான முறையில் சுரண்டப் படுகின்றார்கள். மேற்குநாடுகள் இவற்றைக் கட்டுப்படுத்துவதில்லை. இவை குறித்து அரச கட்டுப்பாடுகளும், சமூக விழிப்புணர்வும் அவசியமாகும்.

இக்கால கட்டத்தில் மனிதன் நிலவுக்கே சுற்றுலா செல்ல துணிந்து விட்டான். ஆகாய விமானங்களை அண்ணாந்து பார்த்து நாம் வியந்த காலம் இன்று மாறி விட்டது. அதே வானத்தில் விமானத்துக்குப் பதிலாகப் பயணிகளைச் சுமந்து செல்லும் ரொக்கெட்டுக்களைக் காணும் காலம் வந்து விட்டது. இதுவரை ஆராய்ச்சியாளர்களை மட்டுமே விண்ணுக்குச் சுமந்து சென்ற ரொக்கெட்டுகள் சுற்றுலாப் பயணிகளைச் சுமந்து செல்லத் தயாராகி வருகின்றன. தற்போது விமான நிலையங்கள் சாதாரணமாகி விட்டாற் போல் அடுத்த தலைமுறையில் விண்ணுலா நிலையங்களும் சாதாரணமாகி விடக்கூடும்.

இந்தத் திட்டத்தை ஸ்பேஸ் போர்ட் அமெரிக்கா என்று பெயரிட்டுள்ளனர். எதிர்காலத்தில் விண்வெளிக்கான சுற்றுலா தினம் என்றொரு தினம் கொண்டாடப்பட்டாலும் ஆச்சரியப்பட வேண்டிய அவசியம் இல்லை.

★

காலைக்கதிர் Kalaikkathir



# ஜெயலலிதாவின் வீடியோ விவகாரம்: உண்மையாக இருக்க வாய்ப்பில்லை

## அன்புமணி ராமதாஸ்



சென்னை,செப்.27

ஜெயலலிதாவை சசிகலா வீடியோ எடுத்தார் என டி.டி.வி.தினகரன் கூறி இருக்கின்றமை உண்மையாக இருக்க வாய்ப்பு இல்லை என்று அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பா.ம.க. இளைஞர் அணி தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு:-


சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய தினகரன், ஜெயலலிதா சிகிச்சை பெறும் போது அவரை சசிகலா வீடியோ எடுத்தார். அப்போது ஜெயலலிதா உடல் மெலிந்து இருந்தது. அதனால் தான் அந்த வீடியோவை சசிகலா வெளியிடவில்லை என்றும் கூறியிருக்கின்றார். மருத்துவ அடிப்படையில் பார்த்தால் தினகரனின் இந்த விளக்கம் ஏற்றுக் கொள்ளும் வகையில் இல்லை.

ஒருவேளை, தினகரன் கூறுகின்றமை போன்று, சசிகலா வீடியோ எடுக்கும்போது ஜெயலலிதா இளைத்துக் காணப்பட்டிருப்பாராயின் இறக்கும் போதும் அப்படியே தான் அவர் இருந்திருக்க வேண்டும். இடைப்பட்ட காலத்தில் அவரது உடல் பருத்திருப்பதற்குச் சாத்தியமில்லை. அவ்வாறு இருக்கும் போது தினகரன் கூறியிருக்கின்றமை உண்மையாக இருக்க வாய்ப்பில்லை.

ஜெயலலிதா மரணம் தொடர்பாக அ.தி.மு.க. அணிகளின் நிர்வாகிகள் கூறும் ஒவ்வொரு விளக்கத்திற்குப் பின்னணியிலும் ஓர் அரசியல் கணக்கு உள்ளது. இவை எதுவுமே ஜெயலலிதா மரண மர்மத்தைப் போக்கா. எந்த ஒரு மனிதரின் மரணமும் சர்ச்சைக்கு உள்ளாக்கப்படக்கூடாது. ஆனால், தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவின் மரணம், அவரது கட்சியினராலேயே இந்த அளவுக்கு சர்ச்சைக்கு உள்ளாக்கப்படுகின்றமை அவரது விசுவாசிகளை வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அரசு அமைத்த ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையிலான ஆணையமோ, சசிகலா தரப்பு வெளியிடவுள்ள வீடியோவோ ஜெயலலிதா மரணத்தின் மர்மத்தைப் போக்கப்போவதில்லை. மத்திய புலனாய்வுப் பிரிவின் (சி.பி.ஐ.) விசாரணை மட்டுமே ஜெயலலிதா மரணம் தொடர்பாக மர்மத்திற்கு விடைகாணும் என்பதால் அதற்கு ஆணையிட தமிழக அரசு முன்வர வேண்டும் என வலியுறுத்துகிறேன். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாலியல் வன்கொடுமை தண்டனையை எதிர்த்து ராம் ரஹீம் சிங் மேல்முறையீடு



தேரா சச்சா செளதா என்ற அமைப்பின் தலைவர் குர்மீத் ராம் ரஹீம் சிங். இவர் தனது இரண்டு பெண் சீடர்களை பாலியல் வன்கொடுமை செய்தார் எனக் கடந்த 2002 ஆம் ஆண்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு தொடர்பான விசாரணையை சி.பி.ஐ.மேற்கொண்டது.

இந்த நிலையில், குர்மீத் ராம் ரஹீம் சிங் குற்றவாளி என சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இரண்டு பெண்களைப் பாலியல் வன்கொடுமை செய்தமை நிரூபிக்கப்பட்டது. எனவே, 376, 506 குற்றப்பிரிவுகளின் அடிப்படையில் இருவழக்குகளிலும் தலா 10 வருடங்கள் என 20 வருடங்களுக்குச் சிறைத் தண்டனை வழங்கப் பட்டது.

இந்த குற்ற வழக்குகளுக்கு அபராதமாக 30 லட்சம் ரூபா விதிக்கப்பட்டது. மேலும், பாதிக்கப்பட்ட 2 பெண்களுக்கும் தலா 14 லட்சம் ரூபா வழங்க வேண்டும் என்றும் தண்டனை அளிக்கப் பட்டது.

இந்த நிலையில், சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தண்டனையை ரத்துச் செய்யக்கோரி பஞ்சாப் மற்றும் ஹரியாணா மாநிலங்களின் உயர்நீதிமன்றங்களில் தேரா சச்சா செளதா அமைப்பின்தலைவர் குர்மீத் ராம் ரஹீம் சிங் தரப்பில் கடந்த திங்கட்கிழமை மேல் முறையீடு செய்யப் பட்டுள்ளது. (ப)

# கமலைச் சீண்டுகின்றார் அமைச்சர் ஜெயக்குமார்



சென்னை,செப்.27

தமிழகத்தில் ஆளும் எடப்பாடி அரசு அகல வேண்டும் என்று கமலஹாசன் சமூக ஊடகமான டுவிட்டரில் வெளியிட்ட கருத்துக்குத் தமிழக மீன் வளத்துறை அமைச்சர் ஜெயக்குமார் காட்டமான பதிலடி கொடுத்துள்ளார்.

சென்னை கோபாலபுரத்தில் உள்ள டி.ஏ.வி. பாடசாலையில் படிக்கும் நான்காம் வகுப்பு மாணவர் பார்கவ், சமீபத்தில் டெங்கு காய்ச்சல் பாதிப்பால் பலியானார். இதனைக் குறிப்பிட்டு கமலஹாசன் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அதில், செவிடர்க்கு நான் ஊதிய டெங்கு ஜுரச்சங்கு வீண் என்றும், டெங்கு மரணங்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்காத அரசு அகலவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ஜெயக்குமார் கமலஹாசன் முன்வைத்த கருத்துக்களை சீற்றத்துடன் விமர்சித்துள்ளார்.

அரசியல் ஒன்றும் சினிமா அல்ல என்று கூறிய அவர், முதல்வர் பதவி பொம்மை அல்ல என்றும், முதல்வராக மக்களின் அங்கீகாரம் வேண்டும் என்றும் கூறியுள்ளார். கமல் முதலில் எம்.எல்.ஏ. ஆகட்டும் அதன் பிறகு மற்றையதை பார்ப்போம் என்று தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக நடிகர் கமலஹாசன், எடப்பாடி பழனிச்சாமி அரசை டுவிட்டரில் கடுமையாக விமர்சித்து வருகிறார்.

கமலஹாசன் அரசியலில் களம் இறங்கப் போகிறாரா என்ற ஊகங்கள் நிலவிவந்த நிலையில் சில தினங்களுக்குமுன், டில்லி முதல்வர் கெஜ்ரிவால் கமலஹாசனை சென்னையில் வந்து சந்தித்துவிட்டு சென்றமை பரபரப்பை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. (ப)

## ஓ.பி.எஸ். கருத்துக்கு விவசாயிகள் எதிர்ப்பு

பெரியாறு அணை விவகாரத்தில் தமிழகத் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்த கருத்துக்கு விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

பெரியாறு அணையில் இருந்து கம்பம் பள்ளத்தாக்கு பகுதி பாசனத்திற்காக நேற்றுமுன்தினம் தண்ணீர் திறக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு தண்ணீரைத் திறந்து வைத்த துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், செய்தியாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு:-

பெரியாறு அணையில் 152 அடி நீர் தேக்குவது தொடர்பாகக் கேரளா- தமிழக முதல்வர்கள் பேச்சு மூலம் தீர்வு காண்பார்கள். - என்றார்.

இதற்கு தமிழக விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இது குறித்து தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்புக் குழுச் செயலாளர் செங்குட்டுவன் தெரிவிக்கையில் -

பெரியாறு அணையில் 152 அடி தண்ணீர் தேக்கலாம் என உச்சநீதிமன்றமே தீர்ப்பு வழங்கி உள்ளது.

எனவே, இதனை நடைமுறைப் படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை விடுத்து கேரள அரசுடன் பேச்சு என்பது தேவையில்லாதது - என்றார்.

# 'செல்பி' எடுத்ததால் வந்த வினை ஏரியில் குளித்த மாணவன் சாவு!

கர்நாடக மாநிலத்தில் ஏரி ஒன்றில் குளிக்கச் சென்ற நண்பர்கள் குழுவில் ஒரு மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான். அவன் மூழ்கும் போது ஏனையவர்கள் அதனைக் கவனிக்காமல் 'செல்பி' எடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது: தமது விடுமுறை நாளை பொழுதுபோக்குவதற்காக ரவகோண்ட்லு பெட்டா என்ற மலைப்பகுதியில் உள்ள ஏரியொன்றில், நண்பர்கள் சிலர் நீராடியுள்ளனர்.

இதன்போது, ஒருவர் தனது கைத்தொலைபேசியில் அனைவரையும் 'செல்பி' எடுத்துள்ளார். 'செல்பி' எடுக்கும் நேரத்தில் குளித்துக்கொண்டிருந்த விஷ்வாஸ் என்ற 17 வயது மாணவர் தண்ணீரில் தத்தளித்த படி மூழ்கியுள்ளார். ஆனால், 'செல்பி' எடுக்கும் ஆர்வத்தில் இருந்ததால் அவர் மூழ்குகின்றமையை மற்றவர்கள் கவனிக்கவில்லை.

சிறிது நேரம் கழித்து, விஷ்வாஸை காணாததமையால் நண்பர்கள் அனைவரும் தேடியுள்ளனர். இறுதியில், அவர் சடலமாகத்தான் மீட்கப்பட்டார்.



இதனையடுத்து, பலியான விஷ்வாஸின் உறவினர்கள் கல்லூரி நிர்வாகத்தின் கவனக்குறைவு காரணமாக தான் இந்த மரணம் நிகழ்ந்துள்ளது என அவரது சடலத்தை கல்லூரியின் முன்னால் வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# வடகொரியா மீது போர் தொடுக்க ரொனால்ட் ட்ரம்ப் பிரயத்தனம்

## வடகொரியா வெளியுறவுத் துறை அமைச்சர்



பியாங்யாங்,செப்.27

எங்கள் நாட்டின் மீது போர் தொடுக்க ட்ரம்ப் முடிவுசெய்துள்ளார் என வடகொரிய வெளியுறவு துறை அமைச்சர் ரி யாங் ஹூ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதாரத் தடைகள், உலக நாடுகளின் கடும் கண்டனங்கள் என எதையும் காதில் வாங்காமல் தொடர்ந்து நைதரசன் வெடிகுண்டு, ஏவுகணை சோதனையை வடகொரியா தொடர்ந்து நடத்தி வருகின்றது. இது அமெரிக்காவுக்குக் கோபத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில், வடகொரியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் ரி யாங் ஹூ நியூயோர்க்கில் நிருபர்களைச் சந்தித்தார்.

அதன்போது அவர் கூறியவை வருமாறு:-

வடகொரியா மீது போர் தொடுக்க ரொனால்ட் ட்ரம்ப் முடிவுசெய்துள்ளார். எங்களுக்கு எதிரான போரை முதலில் அமெரிக்காவே அறிவித்தது என்பதை ஒட்டுமொத்த உலக நாடுகளும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

தற்கொலைப்படைத் தாக்குதல்கள் அப்பாவி அமெரிக்கர்களை பாதித்தால் அதற்கு ரொனால்ட் ட்ரம்ப்தான் பொறுப்பு.

எங்கள் நாட்டிற்கு எதிராக அமெரிக்கா போரை அறிவித்துள்ள நிலையில், எதிர் நடவடிக்கை எடுக்க எங்களுக்கு உரிமை உள்ளது. வடகொரியாவின் வான் எல்லையில் பறக்கும் அமெரிக்காவின் போர் விமானங்களைச் சுட்டு வீழ்த்தவும் எங்களுக்கு உரிமை உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## வடகொரியா மீது போர்; நகைப்புக்கு உரியதே!

### வெள்ளை மாளிகை அறிவிப்பு




நியூயோர்க்,செப்.27

வடகொரியா மீது அமெரிக்கா போர் தொடுக்கப் போவதாகக் கூறுகின்றமை நகைப்புக்குரியது என வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உலக நாடுகளின் கடும் கண்டனங்களையும் மீறி வடகொரியா தொடர்ந்தும் ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. இது அமெரிக்க அரசை எரிச்சலடையச் செய்துள்ளது.

இதற்கிடையே, எங்கள் மீது போர் தொடுக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது என வடகொரியா வெளியுறவுத் துறை அமைச்சர் ரி யாங் ஹூ தெரிவித்தமை கடும் சர்ச்சையையும், பதற்றத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

இந்தநிலையில், நாங்கள் போர் தொடுக்கப் போவதாக வடகொரியா கூறுவது நகைப்புக்குரியது என வெள்ளைமாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ் கூறுகையில்-

வட கொரியா மீது போர் தொடுப்பது குறித்து நாங்கள் இன்னும் முடிவு செய்யவில்லை. இப்படிப்பட்ட நிலையில் நாங்கள் போர் தொடுக்க உள்ளோம் எனக் கூறுகின்றமை நகைப்புக்கு உரியதாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

## மிகப்பெரிய பட்டை தீட்டாத வைரம் 5 கோடி டொலருக்கு ஏலம்!



லண்டன்,செப்.27

உலகின் மிகப்பெரிய மற்றும் பழைமையான பட்டை தீட்டப்படாத வைரம் டொலருக்கு இங்கிலாந்தின் பிரபல டயமண்ட் நிறுவனத்தால் ஏலம் எடுக்கப்பட்டது.

கனடாவின் லூகரா வைர கோர்ப்பரேஷன் இந்தத் தகவலைத் தெரிவித் தது.

இதன் எடை 1,109 கரட்டாகும். இந்த வைரம் 3,106.75 கரட் குல்லியன் அளவு கொண்டது. இதனை 105 சிறிய வைரங்களாக வெட்டலாம்.

ஏலத்தில் இதை இங்கிலாந்தின் பிரபல கிராஃப் டயமண்ட் நிறுவனம் ஒரு கரட்டிற்கு 47,777 டொலர் வீதம் என்ற கணக்கில் ஏலம் எடுத்துள்ளது.

இந்த வைரம் போட்ஸ்வானாவின் சுரங்கம் ஒன்றில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெட்டி எடுத்தனர். இது 2.5 முதல் 3 பில்லியன் ஆண்டுகள் பழைமையானது என்று கூறுகின்றனர். இதற்கு போட்ஸ்வானாவின் தேசிய மொழியில் நமது ஒளி என்று பெயரிட்டிருந்தனர்.

இதுதொடர்பாக கிராஃப் டயமண்ட்ஸ் நிறுவனத் தின் நிறுவுநர் லாரன்ஸ் கிராஃப் தெரிவித்தவை வருமாறு:-

பழைமையான இந்த வைரம் மிகவும் பாதுகாப்பான முறையில் வெட்டி பட்டைத்தீட்டப்படும் என்றார். (ப)

## தீவிரவாதத் தாக்குதல்கள்: ஈராக்கில் 42 பேருக்குத் தூக்கு!



பாக்தாத்,செப்.27

ஈராக் நாட்டில் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தியவர்கள், கார்க் குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்கள் எனச் சன்னி போராளி இயக்கங்களைச் சேர்ந்த 42 பேர் தூக்கிலிட்டு கொல்லப்பட்டனர்.

ஈராக் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தீவிரவாதத் தாக்குதல்களை நடத்திய சன்னி போராளி இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் மீது நடைபெற்ற வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்ட 14 பேருக்கு கடந்த ஜூன் மாதம் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து, நஸ்ஸிரிய்யா சிறையில் நேற்று முன்தினம் 42 பேர் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டனர் என ஈராக் நீதித்துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பப்புவா நியூகினியா தீவில் நிலநடுக்கம்

லண்டன்,செப்.27

பப்புவா நியூகினியா தீவில்நேற்றுஅதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் 6.0 என இது பதிவாகி உள்ளது.

இந்த நிலநடுக்கம் கடலுக்குஅடியில்5.7கிலோ மீற்றர்தொலைவில்சுமார் 6.0 ரிச்டர் அளவு கோலாகப் பதிவானதாக அமெரிக்கபுவிசார்ஆய்வு மையம் தெரிவித்தது.

கடந்த 1998 ஆம் ஆண்டு கடலுக்கு அடியில் அடுத்தடுத்து உண்டான 7 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்தால் மூன்று முறை சுனாமி ஏற்பட்டு, சுமார் 2,100 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

நேற்று ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக சுனாமி எச்சரிக்கை ஏதும் விடப்படவில்லை.

பதுளையில் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி:

# யாழ்ப்பாணப் பல்கலை அணி 13 ஆவது தடவை சம்பியன்!





(கங்கா)

இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின், இறுதிப்போட்டியில் பேராதனைப் பல்கலைக் கழகத்தை வீழ்த்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சம்பியனாகியது. தொடர்ந்து இரண்டாவது தடவை யாகவும், இதுவரையில் 13 தடவைகளும் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம் சம்பியனாகியுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கிடையிலான உதை பந்தாட்டத் தொடர் பதுளையில் நடைபெற்று வந் தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி முதற் சுற்றில் றுகுணு மற்றும் பேராதனைப் பல்கலைக் கழக அணிகளை வென்றது.

காலிறுதியில், தென்கிழக்குப் பல்கலைக்கழக அணியை சமநிலை தவிர்ப்பு உதையில் வென் றது. தொடர்ந்து இடம்பெற்ற அரையிறுதியில் சமநிலை தவிர்ப்பு உதையில் 4:1 என்ற கோல்கள் கணக்கில் மொறட்டுவப் பல்கலைக்கழக அணியை வென்றது.

தொடர்ந்து இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை பதுளையில் இடம்பெற்றது. இதில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக அணியும் பேராதனைப் பல்கலைக்கழக அணியும் மோதின.

போட்டியின் 10 ஆவது நிமிடத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கமலேஸ்வரன் கரன் முதல் கோலைப் போட்டார். முதற்பாதி ஆட்டம் அந்தக் கோலுடன் முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாதியில் மேலதிக கோல்கள் எவையும் அடிக்கப்படவில்லை.

முடிவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 1:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.


இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இத்துடன் 13 தடவைகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உதைபந்தாட்ட அணி சம்பியனாகியுள்ளது.

1979, 1980, 1992, 1995, 1998, 2001, 2005, 2009, 2011, 2013, 2014, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

# கொழும்பு சாஹிரா அணியை வீழ்த்திய சென்.பற்றிக்ஸ் அணி

(கங்கா)

பிரிவு - 1 அணிகளுக் கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், கொழும்பு சஹிரா கல்லூரி அணியை 1:2 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த் தியது சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி.



இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்பியன்சிப் தொடரின் பிரிவு 1 அணிகளுக் கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தற்போது நடை பெற்று வருகின்றது. இதில் சென்.பற்றிக்ஸ்கல்லூரி அணிக் கும் கொழும்பு சாஹிராக் கல் லூரி அணிக்கும் இடையிலான போட்டி நேற்றுமுன்தினம் திங் கட்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது.

போட்டியில் முதற்பாதியாட் டத்தில் சென்.பற்றிக்ஸ் கல் லூரி அணி ஒரு கோலைப் போட்டு முன்னிலை பெற்றது. அந்தக் கோலை அதீசன் போட் டார். முதற்பாதி ஆட்டம் அந் தக் கோலுடன் முடிவடைந்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் சாஹிரா அணி கோல் ஒன் றைப் போட்டு, போட்டியை சமநிலைப்படுத்தியது. எனி னும், நம்பிக்கையுடன் ஆடிய சென்.பற்றிக்ஸ் அணி, போட்டி முடிவடைய ஒரு நிமிடம் இருக்க இரண்டாவது கோலைப் போட்டது. அந்தக் கோலை கிறிஸ்ரீபன் போட்டார். முடி வில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:1 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

# கோல் மழை பொழிந்தது சென்.பற்றிக்ஸ் கல்லூரி

(கங்கா)



பிரிவு - 1 அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், கொழும்பு லும்பினி கல்லூரிக்கு எதிரான போட்டியில் 5 கோல்களைப் பொழிந்து வெற்றியைத் தனதாக்கியது யாழ்ப் பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி.

இலங்கை பாடசாலைகள் உதைபந் தாட்ட சம்பியன்சிப் தொடரின் பிரிவு 1 அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் கொழும்பு லும்பினி கல்லூரி அணிக்கும் இடையிலான போட்டி கடந்த 23 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

போட்டி தொடங்கியது முதல் சென்.பற்றிக்ஸ் அணியின் ஆதிக்கம் மைதானத்தில் நிலைபெற்றது. சென். பற்றிக்ஸ் அணியின் முதலாவது கோலை, அபிசன் அடித்தார். அதே உற்சாகத்துடன் ஆடிய சென். பற் றிக்ஸ் கல்லூரி அணிக்கு இரண் டாவது கோலை சாந்தன் அடித் தார்.

முதல் பாதி ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்திலும் சென்.பற்றிக்ஸ் அணியின் ஆதிக்கம் மைதானத்தில் நிலைபெற்றது. அணிக்கான மூன்றாவது கோலை உருத்திரன் அடித்தார். தொடர்ந்து, நான்காவது கோலை சாந்தன் அடித்தார். போட்டி முடிவடைய சில நிமிடங்கள் இருக் கும் போது, லியன் வெனு ஐந்தாவது கோலை அடித்தார். பதில் கோல் அடிக்கும் முயற்சியில் ஈடுபட்ட லும்பினி அணியின் முயற்சிகள் எவையும் பயனளிக்கவில்லை. முடிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 5:0 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

# திருக்குமரன் விளையாட்டுக்கழக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள்

(கங்கா)

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த உதைபந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 48 விளையாட் டுக்கழகங்கள் இந்தச் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றுகின்றன. அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முதற்சுற்று, இரண்டாம் சுற்று மற்றும் மூன்றாம் சுற்று ஆட்டங்கள் நொக்கவுட் முறையில் நடைபெறவுள்ளன. தொடர்ந்து காலிறுதி ஆட்டத்துக்கு அணிகள் தெரிவு செய்யப்பட்டு, காலிறுதி ஆட்டம் லீக் முறையில் நடைபெறும். அரையிறுதியாட்டம் நொக்கவுட் முறையில் நடை பெற்று, தொடர்ந்து இறுதிப்போட்டி நடைபெறும்.

இன்று நடைபெறும் முதல் ஆட்டத்தில் அராலி திருமகள் அணியை எதிர்த்து மணியந் தோட்டம் ஐக்கிய அணி மோதுகின்றது. இரண்டா வது ஆட்டத்தில் அராலி ஜேம்ஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதுகின்றது.

# இலங்கை கிரிக்கெட் வீரர்கள் என்ன செய்ய வேண்டும்?

## அத்தபத்துவின் கருத்து




மார்வன் அத்தபத்து இலங்கை கிரிக்கெட் கண்டெடுத்த நேர்த்தியான தொழிநுட்ப ரீதியிலான மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர். பல டெஸ்ட் போட்டிகளில் சனத்ஜயசூரியவுடன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களம் இறங்கியுள்ள அத்தபத்து தனது முதல் 3 டெஸ்ட் போட்டிகளிலும் தொடர்ச்சியாக 5 முறை எவ்வித ஓட்டமும் பெறாதவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், பிற்காலத்தில் சர்வதேச அளவில் பிரபலமடைந்த அத்தபத்து 90 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 5,502 ஓட்டங்களைப்பெற்றுள்ளதுடன் அவரது சராசரி 38.48 ஆக உள்ளது.

அவரின் அதிகூடிய ஓட்டம் ஸிம்பாப்வே அணிக்கெதிரான டெஸ்டில்பெற்ற 249 ஓட்டங்களாகும். வலது கை துடுப்பாட்ட வீரரான இவர், டெஸ்ட் அரங்கில் 200 ஓட்டங்களை 6 தடவைகள் பெற்றுள்ளார். 268 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள அத்தபத்து 8,529 ஓட்டங்களைப்பெற்றுள்ளதுடன் அவரது நிகர சராசரி 37.57 ஆகும்.

கடந்த 2007ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்பு பயிற்றுவிப்பாளராக தனது பயணத்தைத் தொடர்ந்த அத்தபத்து, கனடா மற்றும் சிங்கப்பூர் அணிகளுக்கு குறுகிய காலத்திற்கு தலைமைப் பயிற்சியாளராகச் செயற்பட்டார். அதனைத் தொடர்ந்து 2011ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளராக இணைந்து கொண்டார்.

2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இலங்கை அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றிய போல் பாப்ரேஸின் விலகலைத் தொடர்ந்து இலங்கை அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக அத்தபத்து நியமிக்கப்பட்டார். அதனைத்தொடர்ந்து ஒருவருடகாலம் தலைமைப் பயிற்றுவிப்பாளராக அவர் இலங்கை அணியுடன் கடமையாற்றியுள்ளார்.

தற்போழுது கர்நாடக பிரீமியர் லீக்கின் 2017 பருவகாலத்திற்காக பெலகவி பெந்தர்ஸ் அணியின் ஆலோசகராகக் கடமையாற்றும் அத்தபத்து இலங்கை அணிசரிவிலிருந்து மீள வருவது தொடர்பாகக் கூறியதாவது –

நான் எப்போதும் சொல்வது போலதான் கிரிக்கெட்டின் ஒவ்வொரு வகையிலும் ஒருவர் எங்கு தவறுகிறார் என்பதை முதலில் அறிய வேண்டும். டெஸ்ட் போட்டியாக இருந்தாலும் சரி, ஒருநாள் போட்டியாக இருந்தாலும் சரி, ரி-20 போட்டியாக இருந்தாலும் சரி, அடுத்த 2 வருடங்களுக்கு இலங்கை அணியை பிரதிநிதித்துவப்படுத்தப்போகின்ற வீரர்களை முதலில் தெரிவு செய்ய வேண்டும். அதன்பின் அவர்களைச் சிறப்பாகக் கையாள வேண்டும், சிறப்பாகப் பயிற்சியளிக்க வேண்டும், அதன் பின்னர் அவர்கள் சிறப்பாக விளையாட காலம் வழங்க வேண்டும்.

இது பயிற்றுவிப்பாளரினதோ, அணித் தலைவரினதோ அல்லது நிர்வாகத்தினதோ தனிப்பட்ட பொறுப்பல்ல. அனைவரும் ஒன்றுபட்டால் மாத்திரமே வெற்றி சாத்தியமாகும். ஒரு போட்டியில் ஒவ்வொரு தனிப்பட்ட வீரரும் சிறப்பாக செயல்படும்போதுதான் அணி சிறப்பாகச் செயற்படும்.

இலங்கை அணியின் மிக கவலையான விடயம் சிரேஷ்ட வீரர்கள் சிறப்பாக சோபிக்காததுதான். அது ஏன் என்று தெரியவில்லை. சிரேஷ்ட வீரர்களே இளம் வீரர்களை வழிகாட்ட வேண்டும் இதுவே நடைமுறையும் கூட. மாற்றத்துக்குள்ளாகும் காலம் இதனை இனியும் பாவிக்க முடியாது.

இலங்கை அணி நான் சொன்னது போல மீள சிந்திக்க வேண்டும். அதன் பின்னர் நன்கு திட்டமிட வேண்டும். உதாரணமாக அடுத்த 7 தொடர்களை வெளிநாடுகளில் நடத்தக் கூடாது. அது மோசமான திட்டமாகும்.

இலங்கை அணி மாற்றத்துக்குள்ளாகும் காலத்தினை மிக அதிகமாக பாவிப்பதாகவே தெரிகிறது. இதற்கு காரணம் அடிமட்டத்திலுள்ள பிரச்சினை என்று நினைக்கிறேன். அடிமட்டத்திலேயே பிரச்சினை உள்ளது. பாடசாலை கிரிக்கெட் போட்டிகளும் சரி, முதல் தரக் கிரிக்கெட் போட்டிகளும் சரி அந்தளவு போட்டி மிக்கதாக இல்லை. உண்மையில் பாடசாலை மட்ட கிரிக்கெட் சிதைவடைந்துள்ளது.

உலகின் முதல் தரத்திலிருந்த பாடசாலை மட்ட கிரிக்கெட் இன்று உலகின் கீழ்மட்ட நிலைக்கு வந்துள்ளது. பாடசாலை கிரிக்கெட்டில் இருந்து எமக்கு தேவையான வெளியீடு கிடைப்பதில்லை. தேசிய அணியில் இடம்பிடிக்கும் வீரர்களுக்கு அவர்களின் தொழில்நுட்பங்களில் மாற்றங்கள் கொண்டு வந்த சந்தர்ப்பங்களும் உண்டு. இது ஆரோக்கியமான விடயம் அல்ல.

கடந்தசில காலமாக இலங்கை அணியில் உபாதைகள் மிக அதிகமாக உள்ளன. உடற்பயிற்சியில் உள்ள குறைபாடுதான் காரணம். ஒரு நீண்ட போட்டியில் விளையாட தேவையான உடல் வலிமையை எமது உடல் கொண்டிருப்பதில்லை. அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். உதாரணமாக ஒரு வேகப்பந்து வீச்சாளர் கழக மட்ட பயிற்சிகளின் போது ஒரு நாளைக்கு குறைந்தது 15 ஓவர்கள் பந்து வீசவில்லையாயின் அவர் டெஸ்ட் போட்டியொன்றில் 15 ஓவர்கள் பந்து வீசும் போது அவர்களது உடல் அதற்கு ஒத்துழைக்காது.

இலங்கை வீரர்கள் பலர் சிறந்த திறமைகளை வெளிக்காட்டியுள்ளனர். ஆனால் யாரும் தொடர்ச்சியாக சிறப்பாக விளையாடுவதில்லை. எனது கதவுகள் திறந்தே உள்ளன. யாரும் வந்து என்னுடன் பேசலாம். ஒரு வீதமாவது இலங்கை அணிக்கு என்னால் ஏதும் செய்ய முடியுமென்றால் அதுவே எனக்கு மகிழ்ச்சி.

ஒரு தடவை சிறப்பான திறமையை வெளிப்படுத்தினால் எல்லாக் காலமும் அவ்வாறே இருக்க முடியும் எனநினைக்கமுடியாது. அனைவரும் கஷ்டமான காலங்களைக் கடந்ததுதான் ஆக வேண்டும்.

விராட் கோஹ்லியாக இருந்தால் கூட அப்படித்தான். ஆனால், அதனைக் கடக்க கடினமாக உழைக்க வேண்டும், பயிற்சி பெற வேண்டும். பொறுமையுடன் கடினமாக உழைத்தால், எந்த வித கடினமான காலங்களையும் கடக்க முடியும். அது கடினமாக உழைத்தால் மாத்திரமே சாத்தியமாகும் என்று தெரிவித்துள்ளார்.

## வாகை சூடியது ஆவரங்கால் மத்தி!





இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் அமரர் சிவகுருநாதன் ஞாபகார்த்தமாக நடத்திய மாபெரும் கரப்பந்தாட்டச்சுற்றுப்போட்டி யாழின் தெரிவு செய்யப்பட்ட 8 அணிகளிடையே மின்னொளியில் நடைபெற்று வந்தது!

இதன் இறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை இளவாலை மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் இரவு 7.00 மணியளவில் ஆரம்பமாகியது. இறிதியாட்டத்தில் ஆவரங்கால் மத்தி எதிர் ஆவரங்கால் இந்து ஒன்றை ஒன்று எதிர்கொண்டன.

5 சுற்றுக்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில், முதலிரு சுற்றுக்களையும் ஆவரங்கால் கைப்பற்றியது. அடுத்து இரு சுற்றுக்களையும் ஆவரங்கால் மத்தி கைப்பற்ற வெற்றியைத்தீர்மானிப்பதற்காக 5 ஆவது சுற்று பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஆரம்பமாகியது. இதில் மிகவும் அண்மித்த புள்ளி வித்தியாசங்களில் இரு அணிகளும் ஆடிவந்தன. இறுதியில் ஆவரங்கால் மத்தி 15:13 என்ற புள்ளி அடிப்படையில் ஆவரங்கால் இந்துவை வீழ்த்தி வெற்றிக்கிண்ணத்தையும் 15 ஆயிரம் ரூபா பணப் பரிசிலையும் சுவீகரித்தது. ஆட்ட நாயகனாக ஆவரங்கால் மத்தி வி.க. வீரர் அசோகன் தெரிவு செய்யப்பட்டார்.

இறுதியாட்ட நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார்.

## வென்றது விசுவமடு நியூ பாரதி



இருபத்தி இரண்டு கழகங்கள் கலந்து கொண்டு சிறப்பித்த மாபெரும் துடுப்பாட்டச் சுற்றுத்தொடரின், இறுதிப் போட்டியானது, கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி அளவில் நடைபெற்றது. விசுவமடு – நியூ பாரதி விளையாட்டுக்கழகம் எதிர் உடையார்கட்டு – நண்பர்கள் விளையாட்டுக்கழகம் மோதிய இப்போட்டியில், விசுவமடு – நியூ பாரதி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது .

இந் நிகழ்வின் விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், புதுக்குடியிருப்பு இளைஞர் சேவை உத்தியோகத்தர். அருள்நாதர் – விசிதரன் மற்றும் கனகசுந்தரசுவாமி – யெனமனேயன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் போட்டியின் வெற்றி பெற்ற வீரர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் பரிசில்களும் வழங்கப்பட்டன. வெற்றிக் கிண்ணத்தை விருந்தினர்கள் வழங்கிச் சிறப்பித்தனர்.



# அதிகாரப் பகிர்வுக்கு இணக்கம் இறைவன் நமக்கும் தந்த கொடை

## மன்னார் ஆயர் கூறுகின்றார்

அரசமைப்பில் அதியுச்ச அதிகாரப் பகிர்வுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டமை எமக்குக் கிடைத்த இறைவனின் கொடையென மன்னார் கத்தோலிக்க மறைமாவட்ட ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்துள்ளார் என இணையத்தளம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது.

இந்தக் கருத்து முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனை சீண்டியுள்ளது என்றும் அது தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் கிடைக்காத ஒன்றை தென்னிலங்கையிடம் கேட்டுக் கொண்டிருக்கின்றார் என மன்னார் கத்தோலிக்க மறை மாவட்ட ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்துள்ள கருத்தே முதலமைச்சரைச் சீற்றங்கொள்ள வைத்துள்ளது என்றும் அந்த இணையத்தளம் தெரிவித்தது.

நாட்டிலுள்ள அனைத்து மக்களும் அமைதியுடனும் மகிழ்சியுடனும் வாழ வேண்டும் என்று நினைக்கின்ற ஒருவன் நான். இதுவரை காலமும் தனிநாடு கோரி போராடி வந்தாலும், நாம் அதனைத் தற்போது கேட்க முடியாது. நாங்கள் அதனைக் கேட்டாலும் யாரும் தரப்போவதும் இல்லை. இந்த நிலையில், தற்போது கிடைத்துள்ள அதியுச்ச அதிகாரப்பகிர்வை நாம் இறைவனின் கொடையாகப் பார்க்க வேண்டும். அதிகாரங்களை தற்போது பெற்றுக் கொண்டுவிட்டு பின்னர், மீளப்பெற முடியாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். வடக்கு மாகாண முதலமைச்சரோ கிடைக்காத ஒன்றைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார் என ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவித்துள்ளார். – இப்படி அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்தது.

# பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் தினங்கள்

இந்த வருடத்தின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் தினங்கள், கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, 2017ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் ஒக்ரோபர் 5ஆம் திகதியும், கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான பெறுபேறுகள் டிசம்பர் 27ஆம் திகதியும் வெளியாகவுள்ளன.

இதேவேளை, 2017ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைகளுக்கான பெறுபேறுகளை மார்ச் 28 ஆம் திகதி வெளியிட திட்டமிட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# புதிய தேர்தல் முறைமையால் கூட்டமைப்புக்குப் பாதிப்பாம்

## ஐ.தே.கட்சியின் எம்.பி. கூறுகின்றார்

புதிதாகக் கொண்டு வரப்பட்ட தொகுதிவாரி தேர்தல் முறையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் அதிகளவு ஆசனங்களைப் பெறமுடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

மேலும், உள்ளூராட்சித் தேர்தலை வேண்டுமென்று இந்த அரசு ஒத்திப் போடவில்லையெனத் தெரிவித்த அவர், மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அவர் தனக்கேற்ப எல்லை நிர்ணயத்தை மேற்கொண்டார் எனவும், அதனைத் திருத்த வேண்டியதன் காரணமாகவே உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திப்போடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைவரும் தேர்தலுக்குத் தயாராகுங்கள். புதிய தேர்தல் முறையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கியதேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளுக்கு மாத்திரம்தான் ஆசனங்கள் கிடைக்கும். தொகுதிவாரி முறையினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மஹிந்த அணி ஆகியோரால் வாக்குகளையோ ஆசனங்களையோ பெறமுடியாது.

மக்கள் எமக்கு 5 வருட ஆணையை வழங்கியுள்ளனர். அதில் இரண்டு வருடம் கழிந்து விட்டது. இப்போது அந்தக் கடினத்திலிருந்து தப்பிவிட்டோம். இனி 2020, 2025 வரை பயணிப்பது தான் எமது இலக்கு. இனித்தான் பாரிய அபிவிருத்திகள் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பாடசாலைகளுக்கு முன்பாக படை முகாம்கள் வேண்டாம்

## மாந்தை கல்விச் சமூகம் கோரிக்கை

மாந்தை கிழக்கு பாலிநகர் வித்தியாலயம் மற்றும் குமாரசுவாமி வித்தியாலயம் ஆகியவற்றுக்கு முன்பாகவுள்ள இராணுவ முகாமை வேறு இடத்திற்கு மாற்றுமாறு மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் முன்னணி பாடசாலைகளான இந்த பாடசாலைகளுக்கு முன்பாக இராணுவத்தினர் 8.5 ஏக்கர் காணியை கையகப்படுத்தி முகாம் அமைத்துள்ளனர்.

பாடசாலைகளின் வாயில்களின் முன்பாகவும் இந்த படை முகாம்கள் அமைந்துள்ளமையால் மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் பாதிப்புகள் ஏற்படுவதாக கல்விச் சமூகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தப் படைமுகாமை வேறிடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் தியாகி திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் எழுச்சியுடன் நினைவேந்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

பல இடங்களிலும் திலீபனின் வண்ணப்படங்கள் வைக்கப்பட்டு அவற்றுமலர்மாலை அணிவிக்கப்பட்டது. மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

மட்டக்களப்பு ஆரையம்பதியில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

திருகோணமலை, அம்பாறை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும் பலபொது இடங்களில் இத்தகைய நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றமை பற்றிய செய்திகள் நேற்று வந்தவண்ணம் இருந்தன.

புலம்பெய்ந்த தமிழர்கள் வாழும் பல தேசங்களிலும் பல்வேறு அமைப்புகள் முன்னெடுத்த திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அங்கங்கிருந்து நேற்றிரவு வரை வந்த வண்ணம் இருந்தன. (உ)

## தியாகி திலீபன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதையடுத்து, நல்லூர் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில், ஈகச்சுடர் ஏற்றி, மலர்வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கலந்து கொண்டு திலீபனுக்கு வணக்கம் செலுத்தினர்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.

போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்த காலத்துக்குப் பின்னர், தியாகதீபம் திலீபனின் நினைவு நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டமை இதுவே முதல் முறையாகும்.

தியாகதீபம் திலீபனின் தியாகத்தை நினைவுகூரும் வகையில், கைதடியில் இருந்து தூக்கி காவடி எடுத்து வந்த ஒருவர், திலீபன் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தி தனது காவடியை நிறைவு செய்தார். (உ)

## ரோஹிங்யாக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்த ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது இங்கும் பௌத்த தீவிரவாதம் பாய்ந்துள்ளமையை அடுத்து, அவர்களை பூசா தடுப்பு முகாமில் தங்க வைக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தது. (உ)

## அனுமதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணித்த தனியார் பஸ் ஒன்றின் உரிமையாளருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவருக்கு சொந்தமானதெனத் தெரிவிக்கப்படும் இந்த பஸ் அனுமதியின்றி பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்ட சமயம் மாத்தளை நீதிமன்ற நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் வைத்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரிகளால் மடக்கப்பட்டது.

## நாடாளு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளதாக பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

இந்நிகழ்வை ஒட்டி பாதுகாப்பு பலப்படுத்தப்படுவதால் எதிர்வரும் மூன்றாம் திகதி பார்வையாளர்களுக்கு விசேட விருந்தினர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர் என்பதுடன் அன்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட போக்குவரத்து சேவையும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தின் விசேட அமர்வு நேற்று நண்பகல் ஒரு மணிக்கு பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் ஆரம்பமானது. அங்கு சபாநாயகர் அறிவிப்பு நேரத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## வித்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணமாகியிருக்கின்றனஎனப் பிரதிசொலிஸிட்டர் ஜெனரல் குமார் ரட்ணம் தனது தொகுப்புரையில் குறிப்பிட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவலோகநாதன் வித்தியா எனும் 18 வயது பாடசாலை மாணவி 2015ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி குழுவொன்றினால் கூட்டு வன்புணர்வு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

பாடசாலைக்கு சென்ற சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவம் தொடர்பில் பலர் கைதுசெய்யப்பட்டனர். 9 பேர் சந்தேகத்தின் பேரில் தொடர்ச்சியாக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு எதிராகவே வழக்குத் தொடரப்பட்டிருந்தது. (உ)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தனர். இது தொடர்பான சந்திப்பின் பின்னர் பூகோள இலங்கையர் சார்பில் கருத்து வெளியிட்டிருந்த பிரமுகர்கள், ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரிடம் இவ்விடயம் தொடர்பான விவரமான அறிக்கை கையளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையத்தின் முன்மொழிவுகளைத் தாங்கள் சவாலுக்கு உட்படுத்துகின்றனர் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ)

## ஹக்கீம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டப்பட்டதாக ஆஸாத் சாலி பின்னர் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு நுரைச்சோலையில் சவூதி நிறுவனம் ஒன்றால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் உரித்தானவர்களுக்குக் கொடுக்கப்படாமல் பூட்டிக் கிடக்கின்றன.

அவற்றைப் பயனாளிகளுக்குக் கையளிப்பதற்கு இடைஞ்சலாக உள்ள அம்சங்களை அகற்றுதல், தமிழ்மொழிமூல மௌலவி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குதல் உட்படப் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டதாகவும் –

இந்தச் சந்திப்பு தங்களுக்குத் திருப்தியளிப்பதாகவும் ஆஸாத் சாலி பின்னர் குறிப்பிட்டார். (உ)

## இரத்மலானை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ரோஹிங்யா அகதிகளை இலங்கை வட கடல் பகுதியில் வைத்து கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர். அதனைத் தொடர்ந்து இந்த அகதிகள் நீதிமன்ற உத்தரவுக்கமைய மிரிஹானை தடுப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டனர்.

இந்த முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த அகதிகளில் 21 வயது பெண்ணொருவரை பொலிஸ் அதிகாரியொருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் ஒன்றும் பதிவாகியிருந்தது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் அகதிகள் தொடர்பான ஆணையகம் இந்த அகதிகளுக்கு வேறொரு நாட்டில் புகலிடம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துவந்ததாகக் கூறப்பட்டு வந்தது.

அதேவேளை, நீதிமன்ற உத்தரவுக்கமைய அவர்கள் தற்காலிகமாக இரத்மலானை பகுதியில் வாடகைக்குப் பெறப்பட்ட வீடொன்றில் தங்கவைக்கப்பட்டனர்.

இந்த வீட்டை நேற்றுக் காலை திடீரெனச் சுற்றிவளைத்த பௌத்த பிக்குகள் உட்பட சில இனவாத அமைப்புகளின் அங்கத்தவர்கள் அவர்களை நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும் எனக் கோஷங்களை எழுப்பிய வண்ணம் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இதனை அடுத்து, அந்த அகதிகள் கல்கிசை பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரூவன் குணசேகர தெரிவித்தார்.

இதன் பின்னர் நேற்றுப் பிற்பகல் இந்த அகதிகள் மீண்டும் அவர்கள் தங்கியிருந்த வீட்டுக்கு அழைத்துவரப்பட்ட வேளையில், பிக்குகள் உள்ளிட்ட கும்பல் ஒன்று வீட்டைச் சுற்றிவளைத்து, வீட்டினுள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளது. இதனால் அந்த வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் மற்றும் நுழைவாயில் என்பன சேதமடைந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து பெண்கள், சிறுவர்கள் உள்ளிட்ட மியன்மார் அகதிகள் மீண்டும் பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.

இந்த அகதிகளில் 07 பெண்களும் 16 சிறுவர்களும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## சுங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைக்கு அமைய அமைச்சரவை இந்த நியமனத்தை வழங்குவதற்கு முடிவுசெய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை நிர்வாக சேவையில் 26 வருடங்கள் பணியாற்றியுள்ள அவர் அச்சேவையின் விசேட தரத்தில் உள்ளார். முன்னர் வவுனியா மேலதிக அரச அதிபர் மற்றும் வவுனியா அரச அதிபர் பதவிகளையும் அவர் வகித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகப் பட்டதாரியான சாள்ஸ் அதன் பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், ராஜரட்டை பல்கலைக்கழகத்திலும் அனர்த்த முகாமைத்துவம் மற்றும் வியாபார முகாமைத்துவம் ஆகியவற்றில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றவர்.

சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பெண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும். (உ)

# இலங்கை – சீன வெளியுறவுக் கொள்கையில் மாற்றம்!

கொழும்பு, செப். 27

சீனாவை மையப்படுத்தியதாகவே இலங்கையின் வெளியுறவுக் கொள்கை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சீனாவுடன் நெருக்கமான உறவுகள்மேலும்வலுவடைந்து வருவது தொடர்பாக இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலநாடுகள் இலங்கையிடம் அதிருப்தி வெளியிட்டபோதும் சீனாவுடன் நெருக்கமானஉறவை பேணுவதில் இலங்கை அக்கறை காண்பிப்பதாக கொழும்பு தகவல்கள் கூறுகின்றன.



சமீபத்தில் அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான ஒப்பந்தம் சீனாவுடன் செய்யப்பட்ட பின்னர் எழுந்துள்ள விமர்சனங்கள் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை பற்றியதாகவே உள்ளன.

அதேவேளை, காலிமுகத் திடலுக்கு அருகாக மூவாயிரத்தி 320 ஹெக்ரேயர் கடற் பிரதேசத்தை மண்ணால் மூடி மேற்கொள்ளப்படும் கொழும்பு போட் சிற்றி திட்டம், அம்பாந் தோட்டை துறைமுகம் ஆகிய வற்றில் இருந்து கிடைக்கும் வருமானங்கள் இலங்கைக்கும் கிடைக்கக்கூடியவாறு ஒப்பந்தங்கள் செய்யப்படவுள்ளன.

அத்துடன், போட் சிற்றி பிரதேசத்திற்கென தனியான சட்டமும் இலங்கை அரசமைப்பில் சேர்க்கப்படவுள்ளன. இது குறித்த கலந்துரையாடல்கள் சீனாவுடனும் சீன தனியார் கம்பனிகளுடனும் இடம் பெற்று வருகின்றன.

ஆகவே, இதற்கமைவாக சீனாவுடனான வெளியுறவுக் கொள்கைகள் வகுக்கப்பட்டு வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

சீனாவுடன் கூடுதலான உறவுகளைபேணுவது ஆசியப் பிராந்தியத்தில் இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கு ஆபத்து என்ற அடிப்படையில்தான் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

அதனால்தான் ரணில் மைத்திரி நல்லாட்சி அரசு 2015 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது இதன் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா செயற்பட்டார்.

ஆனால், நல்லாட்சி உருவாக்கப்பட்டு இரண்டரை ஆண்டுகள்சென்றுவிட்ட நிலையிலும் மீண்டும் சீனாவுடன் உறவை ரணில் மைத்திரி அரசு புதுப்பித்து வருகின்றது.

அதாவது மஹிந்த ராஜபக்ஷ வுடன்செய்யவிருந்த வேலைத் திட்டங்களை சீனா நல்லாட்சி அரசாங்கத்துடன் மிகவும் இலகுவான முறையில் செய்து முடிப்பதாக கொழும்பில் உள்ள மூத்த இராஜதந்திரி ஒருவர் கூறியுள்ளார்.

ஆகவே, மஹிந்த ராஜபக்ஷவின் அரசை கவிழ்த்ததன் நோக்கம் என்ன? சீனாவுடனான உறவு குறித்து கடும் அதிருப்தி வெளியிட்ட நிலையிலும் இலங்கை தொடர்ச்சியாக சீனாவுடன் உறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக மேற்குலகம் மௌனமாக இருப்பதன் அர்த்தம் என்ன என்றும் அரசியல் வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

தமிழர் விவகாரத்தில் இந்தியா உறுதியான நிலைப்பாட்டை எடுத்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்றும் இந்தியாவின் அசமந்த போக்குகளே இலங்கை சீன உறவு வலுவடைவதற்கான காரணம் எனவும் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

# பர்தா அணிந்து சென்ற இளைஞன் பதுளை பொலிஸாரால் கைது!



கொழும்பு, செப். 27

கண்கள் மட்டும் தெரியும் வகையிலான முகத்தை மூடிய பர்தா உடையணிந்து பஸ்ஸில் ஏறிய இளைஞனொருவனை பதுளைப் பொலிஸார் நேற்று முற்பகல் கைது செய்துள்ளனர்.

தெமோதரையைச் சேர்ந்த 26 வயது நிரம்பிய எஸ்.ஏ. ஜயவர்தன என்ற இளைஞனே பர்தா உடையணிந்திருந்த நிலையில் பதுளைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவராவார்.

இந்த இளைஞன் இஸ்லாமியப் பெண்போன்று, பதுளை பஸ் நிலையத்திலிருந்து பசறை செல்லும் இ.போ.ச. பஸ்ஸில் ஏறிய போது, இவர் குறித்து சந்தேகம் கொண்ட பயணிகள் சிலர் ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கவே, பொலிஸார் அந்த நபரைக் கைது செய்தனர்.

மோசடியொன்றில் ஈடுபடும் பொருட்டே, இவ் இளைஞன் பஸ்ஸில் பயணிக்க முற்பட்டிருக்கலாமென்று பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

பதுளைப் பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# 400 பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களை சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை!



நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் ஏற்படுவதற்கு எந்த வாய்ப்பும் கிடையாது. மேலும், தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு தொடர்பாடல் அத்தியாவசியமானது என்று சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் ஜகத் ஜீ விஜயவீர தெரிவித்துள்ளார்.

இதற்காக தமிழ் பேசும் பொலிஸாரை கடந்த ஆண்டு கூடுதலாக பொலிஸ் சேவையில் இணைத்துக் கொண்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் ஜகத் ஜீ விஜயவீர வானொலி நிகழ்ச்சியொன்றில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர், எதிர்வரும் ஜனவரி மாதத்தில் 250 பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்குவதுடன் மேலும் 400 பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

நாட்டில்நிலவும்சுதந்திரத்தை பயன்படுத்திக் கொண்டு சில தரப்பினர் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டபோதிலும், பாதுகாப்புத்தரப்பினர் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன்செயற்பட்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சிறுமிகளை களியாட்ட விடுதிகளுக்கு விற்கும் சூட்சும நடவடிக்கை அம்பலம்!

கொழும்பு, செப். 27

15 வயதான சிறுமியொருவர் இரவு நேர களியாட்ட விடுதியில் நடனத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த நிலையில் வெலிக்கடை பொலிஸாரால் மீட்கப்பட்ட சம்பவத்தையடுத்து இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரவு நேர களியாட்ட விடுதியில் ஏனைய பெண்களுடன் இந்த சிறுமி நடனத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் சிறுமி மீட்கப்பட்டுள்ளார்.

தும்மலசூரிய பொலிஸ் பிரிவில் வசித்து வரும் பாடசாலை சிறுமி ஒருவரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளாரா என்பதை அறிய அவரை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர் என தும்மலசூரிய பொலிஸார் தெரிவித்தனர்.

நன்கு பழக்கமான 18 வயதான இளைஞன், சிறுமியை திருமண வைபவம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார் எனவும் அன்றில் இருந்து சிறுமி வீடு திரும்பவில்லை என்றும் பெற்றோர் தும்மலசூரிய பொலிஸ் நிலையத்தில் செய்துள்ள முறைப்பாட்டுக்கு அமைவாக முன்னெடுத்த விசாரணைகளிலேயே சிறுமி கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே வெலிக்கடை களியாட்ட விடுதியில் இருந்த சிறுமி வெலிக்கடை பொலிஸாரின் உதவியுடன் மீட்கப்பட்டுள்ளார். வெலிக்கடை பொலிஸார் குறித்த இரவு நேர களியாட்ட விடுதியை சுற்றிவளைத்து சிறுமியை மீட்ட பின்னர், அவரிடம் வாக்குமூலத்தை பெற்ற பின்னர், தும்மலசூரிய பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

இந்த நிலையில் சிறுமியை அழைத்துச் சென்றார் எனக் கூறப்படும் 18 வயது இளைஞனை கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சிறுமியை திருமண வைபவத்திற்கு அழைத்துச் சென்ற இளைஞர் கடந்த 16ஆம் திகதியில் இருந்து 20ஆம் திகதி வரை இரவு நேர களியாட்ட விடுதியில் தங்க வைத்துள்ளார் எனவும், இதன் காரணமாக தான் ஏனைய பெண்களுடன் இணைந்து நடனமாட நேரிட்டது எனச் சிறுமி, பொலிஸாருக்கு வழங்கிய வாக்கு மூலத்தில் கூறியுள்ளார்.

அத்துடன், இரவு நேர களியாட்ட விடுதிக்கு வந்த நடுத்தர வயதான நபர், சிறுமியை பாலியல் செயல்களுக்காக பணியாளர் ஒருவரிடம் விலைக்கு கேட்டார் எனவும், பணியாளர் சிறுமியை நடுத்தர வயதான நபருக்கு கொடுக்க முயற்சித்த போது அங்கிருந்த ஒரு நபர் அதனை எதிர்த்தார் எனவும் சிறுமி பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

இதனடிப்படையில் நடவடிக்கைகளை முன்னெடுத்த பொலிஸார் இரவு நேர களியாட்ட விடுதியில் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டனர் எனக் கூறப்படும் 5 பெண்களையும், 10 ஊழியர்களையும் கைது செய்துள்ளனர்.





தியாக திலீபனின் முப்பதாவது ஆண்டு நினைவாக மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நேற்று புத்தூர்ச்சந்தி பொது மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பழைய மாணவர்கள், உயர்தர மாணவர்கள், நலன்விரும்பிகள் இரத்த தானம் வழங்கினர்.







யாழ்ப்பாண மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் இராணுவத்தினரின் பொதுமக்கள் நல னோம்பும் திட்டத்தின் கீழ் பெரியவிளான் பகுதியில் 513 பிரிகேட்டிற்கு உட்பட்ட 14ஆவது 'கெமுனு வோச்' படைப்பிரிவினால் அமைக்கப்பட்ட வீடு நேற்று உரிய சிவிலியனிடம் கையளிக்கப்பட்டது. யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி அந்த வீட்டைத் திறந்து வைத்து உரியவரிடம் கையளித்தார்.

ஆசிரியர்: **வே.அன்பழகன்**
அவர்களின்

**தரம் - 5 புலமைப்பரிசில்**
**பரீட்சை - 2018**
**வகுப்புகள்**
**ஆரம்பமாகின்றன**

யாழ்ப்பாணத்தில்:
**அன்பொளி கல்வியகம்,**
யாழ். இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்:
**அன்பொளி கல்வி நிலையம்,**
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

அனுமதிகளை 25.09.2017 திங்கட்கிழமை யிலிருந்து 02.10.2017 திங்கட்கிழமை வரை பிற்பகல் 3.00 – 5.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விவரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

— சின்ன விழி அசைத்துச் சிரித்து வரும் சித்திரங்களை
அள்ளி அனைத்து அரிய கல்வி மகிழ்வுடன் ஊட்டிடுவோம் —

**- இயக்குநர்கள்.**

# நல்லூரில் நேற்று திலீபன் நினைவேந்தல்







வவுனியாவில் தியாகி திலீபனின் நினைவு தினம் தமிழ்மக்கள் பேரவை மற்றும் பொது அமைப்புக்களால் அனுஷ்டிக்கப்பட்டது. வவுனியா நகரசபை முன்றிலில் பொங்கு தமிழ் தூபிக்கு முன்பாக தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் இ.தேவராசா தலைமையில் நடைபெற்ற நினைவு நிகழ்வில், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.





தியாக தீபம் திலீபனின் முப்பதாவது நினைவு தினம் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வீ.எஸ்.சிவகரன் தலைமையில் மன்னாரில் நேற்று இடம்பெற்றது. வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் ஐ.குணசீலன், மன்னார் நகர சபை முன்னாள் உப தலைவர் ஜேம்ஸ், மன்னார் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எஸ்.மாட்டீன் டயஸ், மன்னார் நகர சபை முன்னாள் உறுப்பினர் குமரேஸ், மன்னார் மாவட்ட சமாதான அமைப்பின் தலைவர் அன்ரனி மார்க் உட்பட பலரும் கலந்து கொண்டு திலீபனின் உருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினர். அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன. (உ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.